Registered as a Newspaper in Ceylon

தமிழ்நாடு

THE EELA NADU

தசியதினசரி National Tamil Daily

வீ 8 (9-10-66) இதழ் 240

மராபல புரட்டாதி 23 ஜ ஆகிர் 23 ஞாயிற்றுக்கிழமை

பகிஷ்கரிப்பு

எதிர்க்கட்சியினர் நிலைமையில் மாற்றமில்லை

கொழும்பு, சனி

எதிர்க் கட்சி அங்கத்தவர்கள் இன்று தொடர்ந்து தங்கள் ஜனப்பிரதிநிதிகள் சபை பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

ஜனப்பிரதிநிதிகள் சபை கள் எவரும் இன்று சபைக்கு தாங்கள் மேற்கொண்ட இன்று காலை மீண்டும் கூடிய சமரசமளிக்காமல் சபை முடிவிலிருந்து கடுகளவும் பொழுது எதிர்க்கட்சியின அலுவலகத்தில்நடைபெற்றன. மாறுவதில்லை என்ற தீர் ரின் ஆசனங்கள் யாவும் இதற்கிடையில் எதிர்க் மானம் இயற்றியுள்ளனர். காலியாகவே இருந்தன கட்சி பார்லிமெண்ட் குழு; உபசபாநாயகர் திரு. எதிர்க்கட்சி அங்கத்தவர் கடந்த மாதம் 24-ம் திகதி (8-ம் பக்கம் பார்க்க)

"விரும்பும் மொழியில் முஸ்லிம்கள் படிக்கலாம்

போதனு மொழியைத் தெரிவதில் அவர்களுக்கும் உரிமை உண்டு"

பார்லிமெண்டில் அமிர்தலிங்கம்

கொழும்பு, சனி

"வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் விஷயத்தில் நாங்கள் குறுக்காக நிற்கமாட்டோம். எந்த மொழியை அவர்கள் விரும்புகிறார்களோ அந்த மொழியில் அவர்கள் கல்வி வசதிபெறலாம். போதனு மொழி விஷயத்திலும் அவர்கள் தாங்கள் விரும்பும் மொழியில் தங்கள் குழந்தைகளைப் போதிக்கலாம் என்பதே எமது கட்சியின் நோக்கம்' என்று திரு. ஏ. அமிர்தலிங்கம் இன்று பார்லிமெண்டில் பேசுகையில் தெரிவித்தார்.

"முஸ்லிம்கள் தங்கள் பிள்ளைகளின் போதனு மொழியைத் தெரிவுசெய்வதற்கு பூரண உரிமை உண்டு. அதற்கு நாம் குறுக்கே நிற்கமாட்டோம். எங்களுடைய உரிமைகளை பாதுகாத்துக்கொண்டு மற்றவர்களின் உரிமைகளை எதிர்க்கமாட்டோம்" என்று தமிழரசுக்கட்சி பொதுச் செயலாளர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பார்லிமெண்டில் தெரிவித்தார்.

அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது:- "முஸ்லிம்களின் உரிமைகளை அரசாங்கம் பறித்துவிட்டதாக எதிர்க்கட்சியினர் பிரசாரம் செய்து வருகின்றனர். அது பொய்யான வதந்தி. முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கு மிடையில் ஏறு பிளவை ஏற்படுத்துவதற்கு எதிர்க் கட்சியினர் முயன்றுவருகின்றனர், என்றுமே அம்மைப் பிரிக்கமுடியாது".

இலங்கை வானொலியில் தமிழ், முஸ்லிம் நிகழ்ச்சிகள் புறம்பாக நடாத்த வேண்டுமென்ற திரு. ரசிக் பரீத்தின் கருத்தை திரு. அமிர்தலிங்கம் ஏற்றுக் கொண்டார்.

நாகநாதன்

தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசுகையில் 'முஸ்லிம்—தமிழர்களைப் பிரிப்பதற்கு எதிர்க்கட்சியினர் முயலுகின்றனர். அது என்றுமே சாத்தியப்படாது. முஸ்லிம்களின் கோரிக்கைகளை நாம் எதிர்க்கவில்லை" என்றார்.

சின்னலெப்பை

'பாய்ச்சல்"

இச்சமயத்தில் மட்டக்களப்பு 2-வது எம்.பி. ஜனாப் சின்னலெப்பை "நீங்கள் உங்கள் பாட்டைப் பார்த்துக் கொள்ளுங்கள் நாங்கள் எங்கள் பாட்டைப் பார்த்துக் கொள்கிறோம்" என்றார்.

முஸ்லிம்களுக்கு தனியான ஒருவானொலி சேவைதேவை யென்றும், இலங்கை முஸ்லிம்களில் மூன்றில் ஒருபகுதியினர் கிழக்கில் வசிக்கின்றனர் என்று கூறிய சின்னலெப்பை கிழக்குமாகாண முஸ்லிம் பற்றிப் பேசுவதில் தமிழர்களுக்கு உரிமை இல்லையென்றும் அவர்கள் பற்றிப்பேசுவதற்குமுஸ்லிம்கள் இருக்கின்றனரென்றும், என்னசெய்தாலும் முஸ்லிம்களை தேசிய அரசாங்கத்திலிருந்து பிரிக்கமுடியாது என்றார்.

பார்லிமெண்ட் நவம்பர் 6-ம்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நிறைவேறியது

இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட ஒலிபரப்பு கூட்டுத்தாபன மசோதா ஏகமனதாக இன்றிரவு நிறைவேறியது.

தமிழரசுக்கட்சி

பாராளுமன்ற குழுக்கூட்டத்தில் காரசாரமான விவாதம்

கொழும்பு, சனி

இன்று இரவு திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் வீட்டில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

கல்வி வெள்ளை அறிக்கை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள ஆசிரியர்கள் நியமனம் பற்றி இன்றைய கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது.

"எல்லோரும் தாங்கள் தாங்கள் நினைத்தமாதிரி பத்திரிகைக்கு அறிக்கை விடுகின்றனர்" என்று கூட்டத்தில் சிலர் குறிப்பிட்டனர்.

பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப்படவில்லை. நமது நிருபர் மத்திரி திருச்செல்வத்திடம் விபரம் கேட்டபொழுது தமிழர் நலன் கருதி எந்த விதமான செய்தியும் பிரசுரிக்கவேண்டாமென்று அவர் கூறிஞ்ராம்.

தமிழரசுக் கட்சியினர் இம்மாதம் 10-ம் திகதியில் பிரதமரைச் சந்திப்பாரென தெரியவருகிறது.

மாணவர்களுக்கு காணிவழங்கும்திட்டம்

கொழும்பு, சனி

மாணவர்களுக்கு விவசாயத்தில் செயல் முறை பயிற்சி அளிப்பதற்காக முடிக்குரிய காணிகள் வழங்குவதற்கான ஒரு திட்டத்தை காணி அமைச்சு அங்கீகரித்து இருக்கின்றது.

இதன்படி மாணவர்களுக்கு 5 ஏக்கர் நன்செய் நிலம் வழங்கப்படும். அத்துடன் புன்செய் நிலமும் அவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்றது.

விவசாயத்தில் ஈடுபட முன் வருபவர்கள் தங்கள் பகுதி கச்சேரி அதிகாரிகளின் மூலமாக விண்ணப்பம் செய்தால் அதிலாமல் காணி அமைச்சு அவைகளை பரிசீலனை செய்யமாட்டாது என்று தெரிகிறது. மாணவர்களுக்கு விவசாயத்துறையில் பயிற்சியளித்த அத்துறையில் அவர்களை ஈடுபடுத்துவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

சுவீப் முடிவுகள்

கொழும்பு சனி தேசிய லொத்தர் சபையின் 110 வது சிட்டிழுப்பில் பரிசு பெறும் முடிவுகள் பின் வருமாறு:

முதலாவது பரிசு
40 L 0581 ரூ. 100,000
இரண்டாவது பரிசு
05 A 0973 ரூ. 40,000
மூன்றாவது பரிசு
03 R 0247 ரூ. 10,000

(5-ம் பக்கம் பார்க்க)

"ஒலிபரப்புத் துறையில் இலங்கை முன்னேறுகிறது"

மசோதாவை சமர்ப்பித்து ஜே. ஆர். பேச்சு

கொழும்பு, சனி

"இலங்கை வானொலியில் உபகரணங்கள் பற்றாக்குறை இருந்தபோதிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருக்கிறது" என்று பார்லிமெண்டில் ஒலிபரப்பு கூட்டுத்தாபன மசோதா மீது ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனு பேசுகையில் கூறினார்.

மசோதாவை சபையில் பிரேரித்ததிரு. ஜே ஆர். ஜயவர்த்தனு கூட்டுத்தாபன சபையில் 5 அங்கத்தவர்கள் இருக்க வேண்டுமென்ற திருத்தமொன்றையும் கொண்டு வந்திருந்தார்.

திரு ஜே. ஆர். தொடர்ந்து பேசுகையில் 1925-ம் ஆண்டிலிருந்து இன்றுவரைக்கும் இலங்கை வானொலி இயங்கி வந்ததுகுறித்து விளக்கமாகத் தெரிவித்தார்.

ஒலிபரப்பும் அதிகாரபீடம் சுதந்திரமாக இருப்பதையே அரசாங்கம் விரும்புகிறது. கூட்டுத்தாபனம் இயங்கும் பட்சத்தில் இலங்கையில் ஒலிபரப்புவசதிகள் ஒருபடி முன்னேறும் என்றும் அவர் கூறினார்.

சிறந்த அலுமினிய பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிவளம்பரம்

வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக்கு இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணாந்தர் J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

REGAL—JAFFNA
NOW SHOWING
Mc Queen & Ann Margaret
in
M.G.M's
THE CINCINNATI KID
Adults only

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ரலாசிங்கா நடித்த
அங்க் மிச்சோளி
(ஹிந்தி)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
நீதிக்குப்பின் பாசம்

மகாத்மா தியேட்டர்
(நெல்லியடி)
தினசரி 6-30, 9-30
போயாதினங்களில் காலை 10 மணி
சிவாஜி — சாவித்திரி
நடித்த
திருவிளையாடல்

வாறெலி

கொழும்பு

ஞாயிறு 9 - 10 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர காளம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 படத்திலிருந்து.

இரவு 6-10 கிராமச் செய்திகள், 6-15 வாத்திய இசை, 6-30 நாடோடிப் பாடல்கள், 6-45 கத்தோலிக்க ஆராதனை, 7-15 வீணை, 7-30 நாடகம் — 'அவள்', எழுதியவர் மேகவர்ணன், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பாட்டு — ஏ. வேல்சாமி, 10-00 மாதர்கேட்டவை.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

2வது வெற்றி வாரம்!
கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
மொடோர்ண் (பண்டாரவளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தீவொளி (நுவரெலியா) கல்யாணி (நாவலப்பிட்டி)

எம். ஜி. ஆர்., கே. ஆர். விஜயா
சௌகார் ஜானகி, நாகேஷ், பாலையா
மற்றும் பலர் நடிக்கும்
ஆர். ஆர். பிக்சர்ஸ்
பணம் படைத்தவன்

வீதியின் அவலநிலை

உடுப்பிட்டி, சனி

நெல்லியடி மகாத்மாவீதி கடந்த சில வருடங்களாகக் கவனிப்பாரற்று அவலநிலையிலிருப்பதாக இப்பகுதி மக்கள் நெல்லியடி பட்டின சபையின் விசேஷ ஆணையாளருக்கு முறையிட்டதைத் தொடர்ந்து, ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் பிரஸ்தாப வீதியை நேரில் பார்வையிட்டு இவ்வீதியை உடனடியாகத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகப் பொது மக்களிடம் ஆணையாளர் தெரிவித்தார்.

சிறுசேவையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

சிறுசேவையாளர்களை அங்கத்தவராகக் கொண்ட யாழ்ப்பாணம் அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்கந்தவர்தட்டெழுத்தாளர் போன்ற பதவிகளுக்குத் தங்களையும் நியமிக்க வேண்டுமென மேலிடத்தினரைக் கோரியுள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற பரீட்சையில் சிறுசேவையாளர்களாக இருந்த சிங்கள அங்கத்தவர்களில் 12 பேர் மேற்படி பதவிப் பரீட்சையில் பங்கு கொண்டனரென்றும் ஒரு தமிழராகுதல் அப்பதவியில் இடம் பெறவில்லையென்றும், எதிர்வரும் நவம்பர்மாதம் நடைபெறும் பரீட்சைக்குத் தாம் தோற்றுவதற்கு வசதி செய்துதரவேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

வழி மறித்து தாக்கினராம்

கோண்டாவில், சனி

சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. தம்பு சிவசங்கர நாதன் என்பவரை இரவு நேரத்தில் காங்கேசன்துறை வீதியில் வைத்து தாக்கிக் காயம் விளைவித்ததாக தெல்லிப்பழையைச் சேர்ந்த திரு. எஸ். சிவசுப்பிரமணியம், அதே ஊரைச் சேர்ந்த திரு. எம். சின்னப்பா ஆகியோர் மீது சுன்னாகம் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். திரு. சிவசங்கர நாதன் தெல்லிப்பழையில் உள்ள துர்க்கையம்மன் கோவிலுக்குச் சென்று திரும்புகையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது.

பிரயாணிகள் கஷ்டம்

சுழிபுரம், சனி

சுழிபுரம் சந்தியில்இருந்து யாழ்ப்பாணம் - காரைநகர் ஆகிய இடங்களுக்கு செல்லும் பஸ் பிரயாணிகள் மழைகாலத்தில் தங்கிநின்று செல்வதற்கு ஏற்ற வசதிகள் இல்லாததால் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்துவரும் மழையின் காரணமாக பஸ் வண்டியில் பிரயாணம் செய்ய அவ்விடத்தில் நிற்கும் ஆண். பெண் சிறுவர்கள் சேறும் சகதியும்உள்ள குளம் போன்ற இடத்தில் பல மணி நேரம் காக்கடுக்க நிற்கவேண்டியுள்ளது.

116 வயதில் மரணம்

நெடுந்தீவு. ஞாயிறு

நெடுந்தீவைச் சேர்ந்த நாகமணியின் மனைவியாகிய சின்னப்பிள்ளை என்பவர் தமது 116 வயதில் நேற்றுக் காலமானார்.

விளம்பரம்

காணி எடுத்தற்சட்டம்
(அத்தியாயம் 160)
7-ம் பிரிவின் படியான அறிவித்தல்

கடித இல. எல். வீ /4049

கீழிருக்கும் அட்டவணையில் குறிப்பிட்ட காணி காணியைஎடுத்தற் சட்டத்தின்கீழ் எடுக்க உத்தேசித்திருக்கிறது, என்பதை இத்தால் பிரகடனப்படுத்துகிறது. முழு விபரங்களையும் 7-10-66 - ந் திகதியில் வெளியாகும் 14, 716 இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை (III-ம் பாகம்) யில் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டப் பிரிவு: மட்டக்களப்பு
கிராமத்தின் பெயர்: கறுவேப்பங்கேணி கிராமம்மும், கறுவேப்பங்கேணி, மட்டக்களப்பு நகரசபை எல்லைக்குட்பட்ட வாட் இல. 10. அமிர்தகழி
பட இலக்கம்:
துண்டுகள் இலக்கம்: 1 தொடக்கம் 4- பீ. பீ. மட். 10
காணியின் பெயர்: நாவக்கேணித் தோட்டம் கிண்ணையடித் தென்னங்காடும், பாலையத்து வேம்புக்காடும்.

(து. சாமுவேல் தம்பையா)
உதவி அரசாங்க அதிபரும்
காணி எடுத்தல் அதிகாரியும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

146

காணி எடுத்தற் சட்டம்
(அத்தியாயம் 160) கடித இல.
7-ம் பிரிவின் படியான அறிவித்தல்

கீழிருக்கும் அட்டவணையில் குறிப்பிட்ட காணியை காணி எடுத்தற் சட்டத்தின்கீழ் எடுக்க உத்தேசித்திருக்கிறது என்பதை இத்தால் பிரகடனப்படுத்துகிறது. முழுவிபரங்களையும் 1966 ஒற்றோபர் 7-ந் திகதியில் வெளியாகும் 14, 716 இலக்க அசாங்க வர்த்தமானப் பத்திரிகை (III-ம் பாகம்) யில் பார்க்கவும்.

அட்டவணை

மாவட்டப் பிரிவு: மட்டக்களப்பு
கிராமத்தின் பெயர்: புளியந்தீவு
பட இலக்கம்: —
துண்டுகள் இலக்கம்: —
காணியின் பெயர்: "த மன்ஸ்"

உதவி அரசாங்க அதிபரும்
காணி எடுத்தல் அதிகாரியும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

152

குறிப்பு: எல். ஏ/ 1188
1964-ம் ஆண்டின் 28-ம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டபடி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)
7-ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை ஒரு பகிரங்க தேவைக்கு எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1966-ம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 7-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை இலக்கம்: 14, 716 பகுதி III - இல் பார்க்கவும்.

அட்டவணை

காரியாதிகாரியின் பிரிவு: வலிகாமம் வடக்கு காரியாதிகாரியின் பிரிவு.
கிராமத்தின் பெயர்: மாவிட்டபுரம்.
காணியின் பெயர்: முதலியார் புதுக்காடு,புதுக்காடு.கமண்டலவத்தைஎல்பன
ஆரம்ப பட இலக்கம்: பி. பி. ஏ. 2438 இல்.
துண்டு இலக்கம்: துண்டு இல. 251, 252, 253, 254, 255, 256, 257, 258, 259, 260. ஆகியன.

ஜே, எம். சபாரத்தினம்
உதவி அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்.

150

கேள்வி அறிவித்தல்

யாழ். மத்தியநூல்நிலையக் கட்டிடம் பூர்த்தி செய்யும் வேலைக்கு 27—10—66 திகதி நண்பகல் 12 மணி வரை பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து இரண்டு பிரதிகளுடன் கூடிய அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. நூல்நிலையக் கட்டிடம் பூர்த்தியாக்கும் வேலைக்கும், மின்விளக்கு இணைக்கும் வேலைக்கும் தனித்தனி கேள்விப்பத்திரத்தின் பெறுமதியாக ரூபா 10/-ம், கேள்வி வைப்புப்பணமாக முறையே ரூபா 200/-ம், 50/-ம் 22-10-66 திகதி நண்பகல் 12 மணிவரை செலுத்தி மாநகர மராமத்துப் பொறியியலாளரிடம் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்தின் பெறுமதி திருப்பித் தரப்படமாட்டாது.

3. ஏனையவிபரங்களை அலுவலக நேரத்தில் மராமத்து பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(கட்சன் செல்வராசா)
மாநகரசபை ஆணையாளர்
5-10-66. 1315

தேவை

மாரீசன்கூடல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முகாமையாளர் ஒருவர் தேவை.

தகைமைகள்

(1) 21-40 வயதுக்குட்பட்டவராக இருத்தல்வேண்டும்.

(2) கூட்டுறவுப் பயிற்சி பெற்றுச் சித்தியெய்தியவராக இருக்கவேண்டும் அல்லது G. C. E. வகுப்பில் (எண்கணிதம், தமிழ் உட்பட ஆறுபாடங்களில்) சித்தியெய்தி, கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராக இருத்தல் வேண்டும்.

பிணை

காசு ரொக்கம் ரூபா 1,500/-
ஆதனம் ரூபா 2,500/-

சம்பளம்

ரூபா 1,500 — 2,220
10×72
வருடமொன்றுக்கு. (எல்லா சகாய நிதிகளும் உட்பட)

விண்ணப்பிப்போர் பிறப்புப் பத்திரம், கல்வித் தராதரப் பத்திரம், இரு நற்சாட்சிப்பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளுடன் கீழ்க்காணும் விலாசத்துக்கு 25-10-66க்கு முன் காரியதரிசிக்குக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பிக்கவும்.

விலாசம்

காரியதரிசி,
மாரீசன்கூடல், ப. நோ. கூ. சங்கம்,
மாரீசன்கூடல்,
இளவாலை.

1316

விளம்பரம்

ஏலவிற்பனவு அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை பொதுக் களஞ்சியத்தில் 14-10-66 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குபழைய சாமான்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். சாமான்கள் பற்றிய விபரம் பொதுக் களஞ்சியத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(ஒப்பம்)
கட்சன் செல்வராசா
ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்
7-10 66. 1314

அச்சுவேலி
கிறிஸ்தவக் கல்லூரி

புதுப்பிரவேசம் — 1667

மேற்படி கல்லூரியில் ஆறும் வகுப்பில் எழுபது காலிஸ்தானங்களும், நாலாம் வகுப்பில் ஐம்பது காலி ஸ்தானங்களும் உள. விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் பத்திரங்களைப் பாடசாலைக் கந்தோரில் பெற்று இம்மாதம் 17-ந் திகதி திங்கட்கிழமைக்குப் பிந்தாமல் பாடசாலைக் கந்தோரில் ஒப்படைக்கவேண்டும். ஆறுந்தரப் பிரவேசப் பரீட்சையைப்பற்றி விண்ணப்பதாரிகட்கு அறிவிக்கப்படும்.

அதிபர்
1313 7-10-66.

நெடுந்தீவில் வெள்ளம்

நெடுந்தீவு. ஞாயிறு

கடந்த சில நாட்களாக பெய்த பெரும் மழை காரணமாக நெடுந்தீவின் பல பாகங்களிலும் தரைக்கு மேல் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனால் சிலர் வீடுகளை இழந்ததுடன் பல கால் நடைகளும் வெள்ளத்தில் மூழ்கின. தீவின் தென் பகுதியில் தேங்கியுள்ள வெள்ளத்தினால் அப்பகுதிக்குப் போக்கு வரத்து செய்வது மிகவும் கஷ்டமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டு வீச்சை நிறுத்த வேண்டும்

வியட்னும் தகராறு தீர இந்தியா மீண்டும் வலியுறுத்து

நியுயோர்க், அக். 8

வியட்னுமில் குண்டுவீச்சு நிறுத்தப்பட்டால் அந்த நாட்டின் பிரச்னையை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்வதற்கு மிக எளிதாக வழிபிறக்கும் என்று இந்திய வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண்சிங் நேற்று ஐ. நா. பொதுச்சபையில் கூறினர்.

வியட்னும் பிரச்னைக்கு ராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாண்பது முடியாத காரியம் என்று எல்லோருமே ஒத்துக்கொள்கிருர்கள். இந்தப் பிரச்னையில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பாரும் குண்டு வீச்சை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்னைகளை தீர்த்துக்கொள்ள முன்வரவேண்டும். இதற்கு ஜெனிவா மகாநாடுபோன்றஒருமகாநாடே பொருத்தமானது என்று அவர் கூறினர்.

சீனவுக்கு இடம்

சர்தார் சுவர்ண்சிங் மேலும் பேசுகையில், சீனவைப் பற்றியும் குறிப்பிட்டார்.

சமாதான சகவாழ்வுக் கொள்கையைப் புறக்கணித்துவிட்டு சீன மேற்கொண்டுவரும் நிதானமற்ற கொள்கைகுறித்து இந்தியா கவலை கொண்டிருக்கின்றது. சீன தான் ஒதுக்கப்பட்டுவருவதாகக் கருதாமல் இருப்பதற்கு ஐ நா. வில் இடம் கொடுக்கப்படவேண்டும்.

சீன தனக்கென ஒரு தனி முறையிலான கொள்கையை வைத்துக் கொண்டிருப்பதை இந்தியா ஆட்சேபிக்கவில்லை. ஆனல் அதே உரிமை எங்களுக்குமுண்டு என்பதையே நாம் கூறிவருகின்றோம் என்று கூறினர்.

அவர் தொடர்ந்து பேசியபோது, இந்தோனேஷியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையில் நல்லுறவு ஏற்பட்டிருப்பதையும், இந்தோனேஷியா மீண்டும் ஐ. நா. வில் சேர்ந்துள்ளதையும் மலேஸியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் ராஜீய உறவு ஏற்பட்டிருப்பதையும் சர்தார் சுவர்ண்சிங் வரவேற்றுப் பேசினர்.

சர்தார் சுவர்ண்சிங்கின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த சபைஉறுப்பினர்களும் வெளிப்பார்வையாளர்களும் அவரை வெகுவாகப் பாராட்டினர்கள். ஸாம்பியா வெளிநாட்டு மந்திரி சக்திவாய்ந்த பேச்சு எனக் கூறினர்.

ஐ. நா. வுக்கு ஜோன்ஸன் திடீர் விஜயம்

வியட்னும் பிரச்சினை பற்றி யுதாண்டுடன் ஆலோசனை

நியுயோர்க், அக். 8

அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸன் நேற்று திடீரென ஐ. நா. சபைக்கு விஜயம் செய்தார்.

1963-டம் ஆண்டுக்குப் பின்னர் அவர் ஐ. நா. வுக்கு விஜயம் செய்வது இதுவே முதல்தடவை.

ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு: யுதாண்டுடன் அவர் வியட்னும் பிரச்னைகள் சம்பந்தமாக பேச்சுப் வார்த்தைகள் நடத்தியுள்ளார்.

அதிபர் ஜோன்சனின் விஜயம் எதிர்பாராதமுறையில் நடைபெற்றது. அவர் சுமார் ஒரு மணிநேரம் யுதாண்டை சந்தித்துப் பேசினர்.

வியட்னும் தகராறுகள்பற்றி ஜோன்சன் யுதாண்டுடன் விரிவாகப் பேசியுள்ளார் என்று கருதப்படுகின்றது.

வடவியட்னுமில் சிலபகுதிகளில் குண்டு வீச்சை அமெரிக்கா சமீபத்தில் நிறுத்திக் கொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பாராட்டு

உலக சமாதானத்துக்காக யுதாண்ட் ஆற்றிவரும் சேவைகளைத்தாம் பாராட்டியுள்ளதாகவும், தொடர்ந்தும் பொதுக் காரியதரிசி பதவியில் அவர் இருந்து சேவைபுரிய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியிருப்பதாகவும் யுதாண்டை சந்தித்தபின்னர் அதிபர் ஜோன்சன்கூறினர். சந்திப்பு மிகவும் உற்சாகமளிப்பதாக இருந்ததாகவும் அதிபர் ஜோன்சன் கூறினர்.

பாங்கொக் மகாநாடு

இதற்கிடையில் பாங்கொக்கில் உலகப் பிரச்னைகள் குறித்து பேசுவதற்காக நடைபெற இருக்கும் 7 நாடுகளின் மகாநாட்டுக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

வெளியேற உத்தரவு

மாஸ்கோ, அக். 8

சோவியத் யூனியனில் இருக்கும் சீன மாணவர்களை இந்தமாதம் இறுதிக்குள் வெளியேறிவிடும்படி ரஷ்ய அரசாங்கம் உத்தரவு இட்டிருக்கின்றது.

சீன அரசாங்கம் சமீபத்தில் ரஷ்ய மாணவர்களை வெளியேறும்படி உத்தரவிட்டதின் காரணமாகவே ரஷ்யா இந்தப்பதில் நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்று கருதப்படுகின்றது. சீன மீண்டும் கல்வி பரிவர்த்தனையைத் தொடங்கச் சம்மதித்தால் ரஷ்யாவும் சீன மாணவர்களை தொடர்ந்து இருக்க அனுமதிக்கும் என்று கருதப்படுகின்றது.

இலங்கையர் ஐ. நா. வில் உதவித் தலைவர்

ஐ. நா. நியூயோர்க் ஒக் 8

இலங்கையின் திரு. எச். பி. டி. கனகரத்தினம் ஐ. நா. பொறுப்பதிகாரக் கமிட்டியின் உதவித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (பி. டி. ஐ.)

அமெரிக்கா மீது கண்டனம்

ஸ்டொக்ஹோம், ஒக் 8

இங்கு கூடிய உலகக் குழந்தைகள் மாநாட்டில் வியட்னுமில் அமெரிக்க ஆக்கிரமிப்பைக் கண்டித்து, அப்பகுதியிலிருந்து அவர்களை உடனடியாக வெளியேறுமாறு ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (பி. டி. ஐ.)

தென் வியட்னும் துருப்புகள்

டோக்கியோ, ஒக் 8

உத்தியோக பூர்வமான ஹனேய் பத்திரிகையான நான் டான், ஒவ்வொரு மாதமும் சராசரி 15,000 தென் வியட்னும் துருப்புகள் தமது இராணுவத்தை விட்டு வெளியேறுவதாகக் கூறியுள்ளது. (பி. டி. ஐ.)

இந்திய உபஜனதிபதி விஜயம்

புதுடில்லி, ஒக் 8

இந்திய உப ஜனதிபதி டாக்டர் ஸகிர்ஹுசேன் தாய்லாந்து, கம்போடியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு நல்லெண்ணத் தூது விஜயத்தில் கல்கத்தாவிலிருந்து நேற்றுப் புறப்பட்டார். (பி. டி. ஐ.)

பறக்கும் தட்டு பற்றி ஆராய்ச்சி

நியூயோர்க், அக். 8

பறக்கும் தட்டுகள் பற்றி ஆராய்வதற்கு, அமெரிக்க விமானத்துறையினர் முடிவு செய்திருக்கின்றனர்.

கொலராடோ பல்கலைக் கழகம் இந்த முயற்சியை மேற்கொள்ளவிருக்கின்றது.

வான வீதியில் பறக்கும் தட்டுகள் விமானிகளால் விசப் படுகின்றனவா அல்லது அவை வேறு எங்கிருந்து வருகின்றனவா என்று இவர்கள் ஆராய்வார்கள்.

ஆராய்ச்சியின் முடிவுகள் 1968-ம் ஆண்டு வாக்கில் வெளியிடப் படும்.

1500 பேர் மாண்டனர்

ராவல்பிண்டி, அக். 8

பாகிஸ்தானில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது சுமார் 1500 பேர் கொல்லப்பட்டி [illegible]

சமூக விரோதிகளுக்கு இடம் கொடாதீர்

மாணவர்களுக்கு பாரதப் பிரதமர் வேண்டுகோள்

புதுடில்லி, அக். 8

சமூக விரோதிகள் தம்மைத் தவருன வழியில் செலுத்திப் பயன்அடையாமல் மாணவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி நேற்று கேட்டுக்கொண்டார்.

மந்திரி சபைக் கூட்டம் ஒன்றுக்குப்பிறகு நிருபர்கள் மத்தியில் பேசிய திருமதி இந்திராகாந்தி மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

மாணவர்களின் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு வழி செய்யும் விதத்தில் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் திருமதி இந்திராகாந்தி கூறினர்.

சமீபத்திய மாணவர் கிளர்ச்சிகளின் போது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது குறித்தும் அதனல் மாணவர்கள் சிலர் உயிர்நீத்தது குறித்தும் பிரதம மந்திரி கவலை தெரிவித்தார். இறந்தமாணவர்களின் பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் தமது அனுதாபத்தை அவர் தெரிவித்துக்கொண்டார். கிளர்ச்சியின்போது பொலிசார் பலர் காயமடைந்தது குறித்தும் அவர் வருத்தம் தெரிவித்தார்.

'சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாகத்தான் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய வேண்டியேற்பட்டிருக்கின்றது. எனினும் மாணவர்கள் விஷயத்தில் பொலிசார் மிகவும் நிதானமாக நடந்து கொள்ளவேண்டும் அவர்களைத் தமது பிள்ளைகளைப் போல் கருதிநடந்திருக்க வேண்டும் என்று அவர்குறிப்பிட்டார்.

மாணவர்கள் எதிர்காலத்தின் சிறந்த பிரஜைகளாக வரவேண்டியவர்கள் தமது குறைபாடுகளை அமைதியான முறையில் தெரிவிப்பதுதான் முறை. அதைவிடுத்து வன்முறைகளைப் பயன்படுத்துவதும் சோஷலிஸ அமைப்புகளை குலைக்கமுயல்வதும் சரியல்ல. நாட்டின் சமூக எதிரிகள் தமது நோக்கங்களுக்கு அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளாமல் மாணவர்கள் எச்சரிக்கையாகஇருக்கவேண்டும் என்று பிரதமர் கூறினர்.

மாணவர்கள் சமீபகாலத்தில் நடத்திய கிளர்ச்சிகளின் காரணமாக இதுவரை 81 பேர் கைதுசெய்யப்பட்டிருக்கிருர்கள்.

நேற்று மாணவர்களின் தூதுகோஷ்டியொன்று பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியை சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

குழாய் நீர் பிரச்னை

யாழ்ப்பாணம், ஞாயிறு

அண்மையில் சுழிபுரம் கிராமச்சபை எல்லைக்குள்ளமைந்த பொன்னுலைக்குழாய் நீர்த்தகராறைத் தீர்த்து வைக்கும்படி சபைத் தலைவரை உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டிருந்தார்.

மேற்படி தண்ணீர் விநியோகக்குழாய்கள் பழுதடைந்தும், கறள் பிடித்தவையாகவும் இருப்பதால் முற்றாகத்தண்ணீர் விநியோகத்தடை செய்துவிட்டதாக தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 3-ம் திகதி நடைபெற்ற கிராமச்சபை கூட்டத்தில் குழாய்நீர் விநியோகத்தை விஸ்தரிப்பதற்காக உள்ளூர் அமைச்சிடம் ஒரு லட்சம் ரூபா கோருவதென்றதீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டத்தை மேலும் விரிவுபடுத்தவேண்டும்

சிறுபான்மைத் தமிழர் மகாசபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

தற்பொழுதுள்ள சமூகக் குறைபாடுகளைத் தடை செய்யும் சட்டத்தை மேலும் விரிவுபடுத்தி அதை மிகவும் வலிமையுள்ளதாகச் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும்தீர்மானமொன்று யாழ்ப்பாணம் சன்மார்க்க போதனவித்தியாசாலையில் நடைபெற்ற அகிலஇலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பொது நிர்வாகசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

சபை, சமூகக் குறைபாடுகளைத் தடைசெய்யும் சட்டத்தை நன்கு பரிசீலனை செய்தது. சபை உறுப்பினரான திருவாளர் மாட்டின் செல்லையா ஆசிரியர் மேற்படி சட்டத்தை மேலும் விரிவுபடுத்தி வலிமைப் படுத்துவதற்குக் கூறிய திருத்தங்களையும் ஆலோசனைகளையும் சபை ஏற்றுக் கொண்டது.

இச்சட்டம்பற்றி மேலும் ஆராய்வதற்கும் சட்டவல்லுனர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் ஆலோசனைகளையும் பெற்று அரசாங்கத்திற்கு மகஜர் சமர்பிப்பதற்கும் ஓர் உபகுழுவைச்சபை தெரிவுசெய்தது.

மகாசபையின் மகாநாட்டை சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின் சுதேச சத்தியாக்கிரகப் போராட்டத்தின் பின்னரே வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

'சேவைபுரிய முன்வர வேண்டும்'

சங்கானை, சனி

''பின்தங்கிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் கல்வி போதிப்பதற்கு தயங்கக்கூடாது. வசதியீனங்கள் பல இருந்தாலும் தியாக மனப்பான்மையுடன் சேவைபுரிய முன்வர வேண்டும். பின்தங்கிய பகுதிகளில் விசேட சலுகைகள், போக்குவரத்து வசதிகள் முதலியவற்றை அரசாங்கம் செய்து கொடுக்க முன்வந்தால் ஆசிரியர்களும் ஏனைய ஊழியர்களும் மாற்றம் பெறுவதற்கான வழிவகைகளில் நேரத்தை வீணுக்காது தமது கடமைகளில் ஊக்கமுடன் உழைக்க வேண்டும்'' என திரு. மு. சிவானந்தம் மாற்றலாகிச் செல்லும் ஆசிரியர் இ. கணேசனுக்கு பூதர் கலைக் கழகத்தினரால் நடாத்திய சேவைநலம் பாராட்டுவிழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

ஆசிரியர் செ. சிவசக்திவேல் பேசுகையில் குறிப்பிட்டதாவது: "இன்று போல் தானே வா என்ற முறையில் இப்பகுதிக்கு ஆசிரியர்கள் அனுப்பப்படுகின்றனர்கள். பின்தங்கிய பகுதிகளில் சமூக பொருளாதார முன்னேற்றம் காணவேண்டுமானல் கல்வியிற் கூடிய கவனம் செலுத்த வேண்டும். குறுகிய மனப்பான்மையோடு ஆசிரியரைக் கணிக்காது அவர்களுடையசேவைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டியவர்கள் பெற்றோர்கள்.

அமெரிக்காவில செங்காவலர்?

நியூயோர்க், ஒக். 8

ஒரு வருடத்துக்கு முன் உருவாக்கப்பட்ட பீகிங் சார்பான அமெரிக்க கொம்யூனிஸ்ட் கட்சி, அமெரிக்க செங்காவலர் படை ஒன்று உருவாகலாம் என்ற நம்பிக்கையில் நீக்ரோக்களின் பாதுகாப்புக்காக அவர்களுக்கு ஆயுதங்கள் விநியோகம் செய்து வருவதாக அறிவித்துள்ளது. (பி டி.ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

தெய்வத் திருநாமத்தைக் கூறுவதால் மனம் தன் தூய்மையற்ற எண்ணங்களை நீக்குவதோடு கடவுளோடும் உள் ஐக்கியத்தையும் ஒருமையையும் அறியும் உன்னத உணர்வு நிலையையும் நீயும் அடைகிறாய். —சுவாமிஇராமதாஸர்

ஈழநாடு

ELANADU National Tamil Daily, Post Box [illegible]
Telegrams: EELANADU Jaffna; Telephone [illegible]

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு புரட்டாதி மீ 23 (9-10 66)

தமிழ்பேசும் மக்கள்

இலங்கையில் தமிழர்கள் பண்டுதொட்டு வாழ்ந்துவந்துள்ளார்கள். ஆதியில் இலங்கைத் தமிழர்கள் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தார்கள் என்பது சரித்திரவரலாறு. ஆனால் காலகதியில் ஒரு சிலர் மதம்மாறி கிறிஸ்த சமயத்தைத் தழுவினார்கள் எனினும் இவர்கள் தமிழ் பேசும் மக்களாகவே கருதப்பட்டார்கள், சிலர் இஸ்லாம் சமயத்தை ஏற்றுக்கொண்டாலும் தமிழே இவர்களது தாய்மொழியாகவும் வீட்டுமொழியாகவும் பாடசாலைப் போதனா மொழியாகவும் இருந்து வந்துள்ளது; இருந்து வருகிறது. இவர்கள் இலங்கை முஸ்லிம்களென அழைக்கப்பட்டனர். மொழியைப்பொறுத்தவரையில் எந்தக் குடிஜன மதிப்பீடுகளிலும் தமிழ்பேசும்மக்களாகவே இவர்கள் கருதப்பட்டுள்ளார்கள்.

பிற்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு தொழில் வியாபாரம் தேடிவந்தவர்கள் இந்துக்களாயும் முஸ்லிம்களாயும் இருந்தபோதிலும் இவர்கள் தமிழ் பேசும்மக்களாகவே இருந்தார்கள். இவர்கள் வீட்டிலும் பள்ளிக்கூடங்களிலும் தமிழையே தமது தாய்மொழியாக உபயோகித்து வந்துள்ளார்கள். இவர்களது தொழிற் சங்கங்கள், வியாபாரச் சங்கங்கள் ஆகியவற்றின் அலுவல்களை தமிழிலேயே மேற்கொண்டு வந்தார்கள்.

இந்தச்சரித்திரவரலாற்றுக்கு முரணாக, இவர்களைத் தமிழ்பேசும் மக்களல்ல என எதிர்க்கட்சிகள் கூறுவது அரசியல் துரோகமாகும். இது எதிர்க்கட்சிகளின் வகுப்புத் துவேஷ முறையை வெளிப்படையாகக் காட்டுகிறது.

பிற்போக்கான நாடாகிய இலங்கையில் அரசியல்வாதிகள் குறிப்பாக இடதுசாரிகள் பொதுமக்களின் வறுமையை நிவர்த்திசெய்யும் திட்டங்களையும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னைகளைத் தீர்க்கும் திட்டங்களையும், பொதுமக்களின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் ஆகியவை வளர்ச்சியடையக்கூடிய வழிவகைகளையும் ஆராய்ந்து செயல்படுத்த முயற்சி மேற்கொண்டு பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதே நேர்மையான அரசியல் முறை. இதைவிடுத்து இவர்கள் தமிழ் பேசும் மக்களின் செல்வாக்கையும் சீர்திருத்தத்தையும் குறைப்பதுவே நாட்டின் முன்னேற்றமெனக் கருதி, வகுப்புவாதக் கிளர்ச்சியைத் தூண்டிவிடுவதற்கு முயற்சிப்பது மிகவும் தவறானதொரு செயலாகும்.

கல்விவெள்ளை அறிக்கை சம்பந்தமாகவும், தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரிக்கும் முயற்சியில் சிலவீணான பிரசாரங்கள் நடந்துவருகின்றன. முற்போக்கான தமிழ், முஸ்லிம் தலைவர்கள் இப்பிரசாரங்களைப் பொருட்படுத்தாது ஐக்கியத்துடன் முன்னேற்றமடைவதற்கான வழிவகைகளைக் கைக்கொண்டுதேசிய அரசாங்கத்தின் மூலம் சமமான முன்னேற்றமடைய முயற்சி மேற்கொள்வதே அரசியல் ஞானமாகும்.

ஆங்கிலப்பயிற்சி

ஆங்கில மொழியை கட்டாய பாடமாக இலங்கைப் பாடசாலைகளில் கற்பிக்கவேண்டுமென்ற வெள்ளை அறிக்கை முடிவு எல்லோராலும் வரவேற்கப்படும். இந்தியாவில் ஆங்கிலம் கட்டாயபாடமாகப் பாடசாலைகளில் நடைமுறையிலிருக்கின்றது. சர்வகலாசாலைகளில் அங்கு ஆங்கிலம் போதனா மொழியாகவும் இருக்கிறது. ஆனால் இலங்கையில் தாய்மொழி போதனா மொழியாக்கப்பட்டதும் ஆங்கிலப் பயிற்சி படிப்படியாகக் குறைந்து கொண்டே வந்துள்ளது.

ஜி. சி. ஈ. சாதாரணப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியடைபவர்கள் மிகக் குறைவு. விசேஷ சித்தியடைபவர்கள் ஆகக் குறைவே. தற்போது வெளிவந்துள்ள ஜி. சி. ஈ. (உயர்தரம்) பரீட்சையில் குறைந்த அளவு மாணவர்களே ஆங்கிலத்தில் சித்தியடைந்துள்ளார்களென்றும், ஆங்கிலப் பயிற்சி அளிக்கும் முறைகளையும் ஆசிரியர்களையும் கண்டிக்கவேண்டிய நிலையிலிருப்பதாகவும் பரீட்சைக் கமிஷனர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையைக்கல்வி அமைச்சரும் வித்தியா பகுதியினரும் உடனடியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். வித்தியாபகுதியின்கல்விப் பயிற்சி மேற்பார்வையாளர்களது கடமைகள்சமீப காலங்களில்குறைந்துவிட்டது. ஆசிரியர்கள் கற்பிக்கும் முறைகளையும் போதனைகளையும் சரிவர அனுஷ்டிக்கிறார்களா எனப் பார்த்துக்கொள்வது வித்தியா பகுதியினரின் பிரதான கடமை.

முன்னாட்களில் வருடாவருடம் அனுபவம்வாய்ந்த வித்தியாதரிசிகள் பாடசாலைகளுக்கு சென்று கல்விப் போதனைகளைப் பரிசோதனை செய்து ஆசிரியர்களுக்கு ஆலோசனை கூறுவது வழக்கம் இது இப்போது குறைந்துள்ளதும் கல்வித்தரம் குன்றியுள்ளதற்குஒரு காரணம்.

விசேஷமாக ஆங்கிலம் போன்றதொரு பிற மொழி கற்பிக்கும் முறைகளையும் போதனைகளையும் பரிசோதிப்பதும் முற்போக்கான கல்வி முறைகளை ஆசிரியர்களுக்கு எடுத்துக்காட்டுவதும் வித்தியாபகுதியாரின் முக்கிய கடமை.

ஆங்கிலப்பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் குறைவாக இருக்கும் பாடசாலைகளில் போதிய பயிற்சியும் அனுபவமும்குறைந்தஆசிரியர்களை அனுப்பும்முறை சீர்திருத்தப்படவேண்டும் தகுதி பெற்றவர்களையே ஆங்கில மொழி போதிப்பதற்கு அனுப்பவேண்டும்.

ஆங்கில மொழி பேச்சுவன்மை, எழுத்துவன்மை பாடசாலைகளில் தரம் குறையாது அமைகின்றதா என்பது கவனிக்கப்பட்டு, இவை சீராக நடைபெற சகல முயற்சியும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சில பாடசாலைகளில் நான்கில் ஒரு பகுதிநேரம் ஆங்கிலத்துக்கே ஒதுக்கப்படுகின்றது. இந்தநீண்ட நேரம்பிரயோசனமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்தப்படச் செய்துன் கல்லூரி அதிபர்களின்கடமை மட்டுமல்ல அரசாங்கத்தினதும் [illegible] கடமையுமாகும்.

'தமிழ் பேசும் மக்களாக முஸ்லிம்களைக் கருதவேண்டாம்'

இஸ்லாமியசோஷலிச முன்னணி கூட்டத்தில் பதியுதீன் முகம்மது

கொழும்பு, சனி

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றச் செல்லும் சிங்கள ஆசிரியர்களுக்கு அப்பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்கள் எல்லா உதவிகளையுமளிக்க வேண்டும்." இவ்வாறு கடந்த வியாழனன்று இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியின் முதலாவது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

முஸ்லிம்களுக்குக் கடந்த தேர்தலில் யு. என். பி. பொய் வாக்குறுதிகளை அளித்து ஏமாற்றிவிட்டதாகவும், அவர்களுடைய முன்னேற்றத்தில் அதற்கு உண்மையில் அக்கறையில்லை எனவும், தமிழரசுக்கட்சியினருடன் உடன்படிக்கைசெய்துவிட்டால் அது நாட்டில் தேசிய ஒற்றுமையை நிலைநாட்டி விட்டதாகாதெனவும், சமஷ்டி அரசியலமைப்பின் கீழ் தனித் தமிழ்நாடே தமிழரசுக் கட்சியினரின் கோரிக்கையாக இன்னும் இருந்து வருகிறதெனவும் அவர் மேலும் கூறினார்.

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியின் தலைவர் திரு. பதியுதீன் மஹ்மூத் கூறியதாவது:

"கல்வி, நிர்வாகம், தொழில்துறை ஆகியவற்றில் தமக்குக் காலனி ஆட்சியாளரால் அளிக்கப்பட்ட விசேஷ ஸ்தானத்தைப் பாதுகாத்துக்கொள்ள தமிழர்கள் போராடுகிறார்கள். அத்துடன் தமிழர்க்கெனச் சுயாதீன நாடொன்றையும் நிறுவப்பார்க்கிறார்கள்.

இதைப் பின்பற்றி தமிழ் மொழிக்கு விசேஷ அதிகாரம், ஓர் பூரண தமிழ்ப்பல்கலைக்கழகம், தாம் அதிகமாக வாழுமிடங்களில் அரசாங்க கைத்தொழில்நிறுவனங்கள் மகாவலிகங்கையை வடக்கே திருப்புதல் ஆகியவற்றை அவர்கள் கோரி வருகிறார்கள்.

தமிழ்த் தலைவர்களின் இத்தகைய பேராசைத்திட்டங்களின் பயனாகத் தான், வட, கிழக்கில் வாழும் முஸ்லிம் பெற்றோர்கள் தமிழ்ப்பிள்ளைகளுக்கு உத்தியோக மொழியான சிங்களம் கற்பிக்கப்படவேண்டுமென கோரியபோதும், இவர்களின் ஒரே மொழி தமிழ்மொழியாக இருக்கவும், வட, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்படும் ஆசிரியர்களை எதிர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியினரான நாங்கள், 'தமிழ்பேசும் மக்கள்' என்ற ரீதியில் முஸ்லிம்களை அச்சொற்றொடருள் அடக்கவோ அல்லது முஸ்லிம்களுக்காகத்தாங்கள் பேசுவதற்கு உரிமை யுள்ளவர்கள் எனக்கூறிக் கொள்ளவோ தமிழரசுக்கட்சி அல்லது தமிழ்க்காங்கிறஸ் முயற்சி செய்வதைப்பலமாகக் கண்டிக்கிறோம்.

நாங்கள் இலங்கையில் ஒற்றையாட்சியையே விரும்புகிறோம். தமிழரசுக்கட்சியின் சமஷ்டி அல்லது மாவட்ட சபைகளினாலோ அல்லது வேறெந்த விதத்திலோ சரி, இந்நாடு பிரிவுபடுவதை நாம் எதிர்க்கிறோம்;

இலங்கையின் உத்தியோக மொழியாகச் சிங்களத்தையே நாம் ஏற்கிறோம்.

அரசியல் பொருளாதாரச் சுதந்திரத்தின் முழுப்பெறுபேறுகளையும்இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் அனுபவிக்க ஏதுவாகும் சோஷலிச அரசாங்கத்தை நிறுவுவதே எமது நோக்கம்.

திரு. லெஸ்லி குணவர்த்தனா எம். பி; திரு. எம். அப்துல் மஜீத் எம். பி; செனட்டர் ஏ. ஆர். எம். ஹமீம் ஆகியோரும் பங்கு பற்றிப் பேசினர்.

நியூசிலாந்து பொதுத் தேர்தல்

வெலிங்டன், ஒக். 8

நியூசிலாந்தில் நவம்பர் 26-ந் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. வியட்னாம் போரில் இந்த நாட்டின் பங்கு தொடக்கம் வாழ்க்கைச் செலவின் உயர்வு வரைக்கும் பல பிரச்னைகள் தேர்தலில் இடம்பெறுகின்றன. இதே தினத்தில் தான் அவுஸ்திரேலியாவும் தனது பொதுத் தேர்தலை நடாத்தவிருக்கிறது.

பறங்கியருக்கு சிங்களக் கடிதம்

பலாலி, சனி

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலுள்ள வாசிகசாலை பொறுப்பாளருக்கு அனுப்பப்பட்டுள்ள இடமாற்றக் கடிதம் தனிச் சிங்களத்தில் வந்துள்ளது.

இவர் ஒரு பறங்கியராய் இருந்தும் சிங்களத்தில் கடிதம் வந்துள்ளது. இப்பறங்கியரான வோக்ஸ் மிஸ்ஸரர் தற்பொழுது மட்டக்களப்புக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு அ. நடராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

இடமாற்றம்

துணுக்காய், சனி

மல்லாவி அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியர் பண்டிதர் மு. ஆறுமுகம் உருத்திரபுரம் மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். உருத்திரபுரம் மகாவித்தியாலய ஆசிரியர் திரு. சி. சந்திரசேகரம் மல்லாவி அரசினர் தமிழ் வித்தியாலயத்திற்கு பதில் தலைமை ஆசிரியராய் இம்மாதம் தொடக்கம் மாற்றப்பட்டுள்ளார்.

யாழ். துறைமுகத் தொழிலாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"தொழிலாளர்களும் தொழிற்சங்கங்களும் தங்களுக்கிடையிலுள்ள சாதி, மத, அரசியல் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக ஒத்துழைத்தால் தான் தொழிலாளர்களும் நாடும் நன்மைபெறமுடியும்."

யாழ். துறைமுக தொழிலாளர் பொதுசேவைச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட முன்னாள் யாழ்.மேயர் திரு. எம். ஜேக்கப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்; யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்கள் தங்கள் வேற்றுமைகளை மறந்து யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுத் துறைமுகச் சேவை சம்மேளனத்துடன் இணைந்து ஒத்துழைத்தால் கிளைச் சங்கங்கள் பலமும் பயனுமடையலாமென்றும் கூறினார்.

செயலாளராக திரு. ஜே. அன்ரனியும், பொருளாளராக திரு. ஜே. மரியதாசும் தெரிவு செய்யப்பட்டனர். நடப்புவருட நிர்வாகசபை உறுப்பினர்களாக 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

கப்பல் தொழிலாளர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கு உணவு அமைச்சர் வடபகுதிக்கு அடிக்கடி உணவுக்கப்பல்களை அனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

உணவு-விவசாய ஸ்தாபன மகாநாடு

கொழும்பு, சனி

உணவு-விவசாய ஸ்தாபனத்தின் தூரகிழக்கு நாடுகளின் 4வது மகாநாடு நுவரேலியாவில் நேற்று ஆரம்பமாகியது.

மகாநாட்டை உணவு-விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டா ஆரம்பித்துவைத்தார். இந்த மகாநாட்டில் மிருக உணவு பற்றிய விஷயம் புராதன இடத்தை வகிக்கின்றது. இந்த மகாநாடு இம்மாதம் 17ந் தேதி வரை நடைபெறும்.

திரு எம். டி. பண்டா மகாநாட்டில் உரை நிகழ்த்தியபோது இலங்கை மிருக உணவு உற்பத்தியில் அதிக கவனம்செலுத்தும் என்று கூறினார்.

ஒருலட்சம் வேண்டும்

சுழிபுரம், சனி

பொன்னாலைப் பகுதி மக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்வதற்கு ஒரு இலட்சம் ரூபா நன்கொடையாக சுழிபுரம் கிராம சபைக்கு வழங்கும்படி கிராம சபையினர் உள்ளூராட்சி அமைச்சரை கேட்டுள்ளனர். கிராம சபைத் தலைவர் க. கந்தசுவாமி தலைமையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விசேஷ பூஜை

சங்கானை, சனி

சங்கானையில் உள்ள பழமைவாய்ந்த தேவாலயங்களுள் ஒன்றான அர்ச். சலேசியார் தேவாலயத்தில் விசேஷ பூஜை நடைபெற்றது. திவ்விய பூஜையும், ஆசீர்வாதமும், திவ்விய பாடற்பூஜையும் நடைபெற்ற பின்பு அர்ச். சலேசியார் திருச்சொரூபச் சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. வண.பிதா எஸ். சவுந்தரநாயகம் இவ்வைபவத்தைநடாத்திவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு பரிசீலனை செய்த பின்பே' அமுலாக்க வேண்டும்'

மாணவரை தரம் பிரிக்கும் திட்டம்பற்றி உடுப்பிட்டி எம்,பி

உடுப்பிட்டி, சனி

''பல ஆண்டுகட்குப் பின்னர் முதன் முதலாக நடைபெறும் இப்பெற்ருர் தின விழாவில் கலந்துகொண்டதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு, இதுவரை காலமும் இப்பாடசாலை பின்தங்கிய நிலையிலேயே இருந்துவந்ததையிட்டு வேதனையடைகிறேன் இப்பொழுது இப்பாடசாலை முன்பிருந்ததைவிட பல தூரம் முன்னேறியிருப்பதுடன், அரசாங்கம் புதிய கட்டடமும் அமைத்துக் கொடுத்துள்ளது. 1961-ம் ஆண்டு பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்ட பின்னரே நாட்டில் கல்வித் துறையில் புதிய திருப்பம் ஏற்பட்டது. இந்த நல்ல முடிவினுல் நாட்டுக்குகந்த கல்விமுறையை மாணவர்கள் பெறும் வாய்ப்பேற்பட்டது. கல்விக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பாகவுள்ளதால் நாடு பூராவும் உள்ள பாடசாலைகளில் மாணவர்கள் வேறுபாடில்லாத பொதுக்கல்வியைப் பெற்றுவருகிருர்கள்''

மேற்கண்டவாறு கரணவாய் தெற்கு மணியகாரன் தோட்டம் சைவவித்தியாசாலையின் 100 ஆண்டுகட்குப்பின்னர் முதன் முதலாக நடைபெற்ற பெற்ருர் தின விழாவுக்கு தலைமை வகித்த உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறினர். தலைமையாசிரியர் திரு. ச. சுப்பையா ஆண்டறிக்கை வாசித்தார். ஆசிரியர் திரு. எஸ்.தாமோதரம்பிள்ளை வரவேற்புரை கூறினர்.

உடுப்பிட்டி எம். பி. மு. சிவசிதம்பரம்தமது தலைமையுரையில்தொடர்ந்து கூறியதாவது:

''இலங்கை இன்னும் தேசியவளர்ச்சிபெறவில்லை. இலங்கைக்கு இப்பொழுது தொழில்வளர்ச்சி, விவசாய வளர்ச்சி ஆகிய இரண்டுமே மிக முக்கிய தேவைகளாக இருக்கின்றன. இவ்விரு துறைகளிலும் நாம் போதிய வளர்ச்சிபெற்ருலே நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்படுத்தமுடியும். எமது நாடு சுபீட்சமடைய வேண்டுமானுல் நாமனைவரும் சுறுசுறுப்புடன் ஒற்றுமையாகச் செயல்படவேண்டும்.

இலங்கைக்குஇப்பொழுது ஏற்றுமதிப் பொருள்களில் முன்பிருந்ததைப்போல் அதிக வருவாயில்லை. எமது பிரதான ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, ரப்பர் ஆகியவற்றின் விலை உலகசந்தையில் வீழ்ச்சியடைந்துள்ளதே இதற்குக் காரணமாகும். இதனைக் கருத்திற் கொண்டு எமது நாட்டிலேயே எமது வருவாயைப்பெருக்க முயல வேண்டும். புதிய கல்வித் திட்டம் மாணவ மாணவிகளுக்கு விவசாயம், தொழில் ஆகிய துறைகளில் பயிற்சியளிக்க வழி வகுத்துள்ளது. வெள்ளையறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் ''மாணவரைத் தரம் பிரிக்கும்'' யோசனை நல்ல யோசனை என்ற பொழுதிலும் அபாயகரமானதென்றே கூறலாம். இத்திட்டத்தை நன்கு ஆராய்ந்து பரிசீலித்த பின்னரே அமுல் செய்ய வேண்டும். தொழில் கல்வியைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் எம்மிடையே இல்லையென்பது பகிரங்க இரகசியம். புதிய வெள்ளையறிக்கையைப்படிப்படியாக அமுல்நடத்தக்கூடிய கல்லூரிகள் இல்லை. மாணவர்களுக்குப் புத்துணர்ச்சியும் எதிர்கால வாழ்வு சிறந்ததாகவும் அமையக் கூடிய பொறியியல், இரசாயன நுட்பக் கலைகளைப்புகட்ட வேண்டும். பிள்ளைகளின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஆசிரியர்களிடம் அளித்துள்ளது. பிள்ளைகளைத்தரம் பிரித்து அவரவர்க்கேற்ற துறைகளில் ஈடுபடுத்தும்போது ஆசிரியர் மிகக் கவனத்துடனும், பாரபட்சமற்றமுறையிலும் நடந்து கொள்ளவேண்டும். ஆசிரியர்கள் தமது கடமையிலிருந்தும் சிறிது தவறுவார்களேயானுல் பிள்ளைகளின் எதிர்காலம் நாசமாகக் கூடும் என்றும் அஞ்சுகின்றேன். ஆசிரியர்களின் கடமை மிகவும் புனிதமானது.''

திரு. ஆர். சிவபாதசுந்தரம் பேசுகையில் கிடைத்தற்கரிய மனித வாழ்வைப் பெற்றநாம் உலகிலுள்ள சகல உயிரையும் அன்பாக நடத்தினேமானுல் எமது வாழ்க்கையில் இன்பம் பெறலாம் என்று சொன்னர்.

உடுப்பிட்டிப் பகுதி வித்தியாதரிசி திரு. வி. தர்மசங்கரி பேசுகையில், ''நான் அண்மையில் இப்பகுதியைச் சேர்ந்த ஒருபாடசாலையைத் திடீர் சோதனை செய்தபோது ஒரு புதுமையைக் கண்டேன். முதலாம் வகுப்புப் பிள்ளையின் கல்வித்தரம் மூன்றும் வகுப்புப் பிள்ளையின் கல்வித்தரத்தை விட மேலானதாயிருந்தது. நான் இதுபற்றித் தலைமையாசிரியரிடம் விசாரித்தபொழுது முதலாம்வகுப்பை ஓர் பெண் ஆசிரியை படிப்பிப்பதாகவும் 3-ம், 4-ம் வகுப்புக்களை ஆண் ஆசிரியர்கள் படிப்பிப்பதாகவும் தெரிவித்தார். இதிலிருந்து முதலாம் வகுப்பில் படிப்பித்த ஆசிரியை தனது கடமையைச் சரிவரச் செய்துள்ளாரென்றும், இதர வகுப்பு ஆசிரியர்கள் தமது கடமையைச் சரியாகச் செய்யவில்லையென்றும் அறிந்துகொண்டேன். இப்படியான ஆசிரியர்கள் மீது கடுமையான தண்டனை வழங்கப்படவிருக்கிறது. புதியகல்வித்திட்டம் 4 ஆண்டுகளின் பின்னரே அமுல் நடத்தப்படும் இத்திட்டத்திஞல் பயப்படவேண்டியதில்லை''என்று கூறினர்.

கலை கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

அச்சுத்தொழிலாளர் சம்பள உயர்ச்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

அச்சுத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சம்பளத்தை இம்மாதம் தொடக்கம், கூட்டுவதற்கு அச்சுத்தொழில் சம்பள நிர்ணய சபை முடிவுசெய்துள்ளது.

இவ்வடிப்படைச் சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவை ஒட்டிக் கணிக்கபடும் விசேஷ அலவன்சும் அச்சுத்தொழிலாளருக்கு வழங்கப்படும்.

18 வயதிற்கு மேற்பட்ட தேர்ச்சிபெருத தொழிலாளரின் சம்பளமும். 18 வயதிற்கு உட்பட்ட தேர்ச்சி பெருத தொழிலாளரின் சம்பளமும் உயர்த்தப்பட்டுள்ளது.

வடபகுதி பல்கலைக்கழகபுகுமுகபரீட்சைமுடிவுகள்

கொழும்பு, சனி

இலங்கைப் பல்கலைக் கழகக் கலைப் பிரிவு புகுமுக வகுப்பு பரீட்சையில் சித்தி பெற்ற வடபகுதி பாடசாலை மாணவர்கள், தனிப்பட்டோர் விபரம் வருமாறு:

யாழ். இந்துக் கல்லூரி: எம். எஸ். அல்லாப்பிச்சை, பி. ஆனந்தலிங்கம், ரி. அருளானந்தம், ஆர். ஜெயரத்னராஜா, டி. கமலநாதன், கே. குகனேசன், எஸ். குணநிதி, எஸ். பத்மநாதன், எஸ். பூலோகசிங்கம், எஸ். செல்வரத்னம், எம். சிவானந்தா, வி. ஸ்ரீஸ்காந்தா, ஏ. எச். தசிம், ஆர். துரைராஜா, எஸ். யோகராசா.

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி: கே. ஞானலிங்கம், வி. முருகையா, வி. ரத்தினம், எஸ். சுந்தரலிங்கம், கே. வீரசிங்கம், எஸ். விசுவலிங்கம், செல்விகள். கே. சிவகாமசுந்தரி, கே. சிவயோகதேவி.

யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்: பி. லோகநாதன், ரி. நாகராஜா செல்விகள். பி. பாலசிங்கம், வி. ஜோசேப், எம். சிவகுரு.

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம்: செல்விகள்: கே. முத்துத்தம்பி. ஜே. பொன்னுக்கோன்.

சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி: வி. பொன்னம்பலம், செல்விகள்: வி. இருபாநிதி, பி. ராஜேஸ்வரி.

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி: செல்விகள்: கே. லலிதாதேவி, ரி. யோகமலர், எஸ். கமலநாதன், எம். பரமானந்தராஜா.

மிருசுவில் இராமநாதன் மகாவித்தியாலயம்: பி. அரியரத்தினம்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி: செல்விகள்: கே. நாரயணசாமி, கே. சுப்பிரமணியம், கே. செல்லையா, வி. கலையரசி, எஸ் கமலநாயகி, கே. நாகம்மா, கே. நகுலசந்திரமதி, வி. என். பிரேமாவதி, ரி. ராஜேஸ்வரி, எஸ். சந்திரா, ஏ. சரோஜினிதேவி, ஏ. தேவிகாராணி, ரி. விமலாம்பிகை.

உரும்பிராய் இந்துக் கல்லூரி: செல்விகள்: எஸ். கலாம்பிகை, எஸ். செல்வராணிமலர்.

வரணி மத்திய மகா வித்தியாலயம்: கே. கணேஷ பிள்ளை.

வசாவிளான் மத்தியமகா வித்தியாலயம்: எஸ். சிவபாதம்.

வேலணை மத்திய மகா வித்தியாலயம்: செல்விகள்: எஸ். கமலாம்பிகை, எஸ். யோகவதி.

முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி: எஸ். கந்தசாமி.

யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரி:- செல்வி எஸ். அன்னலக்ஷ்மி, செல்வி ஆர்.புஷ்பவதி, செல்வி ஏ. சுப்புலக்ஷ்மி, செல்வி எஸ். திலகவதி.

கொக்குவில் இந்துக்கல்லூரி: செல்விகள் ஜி. சின்னத்தம்பி, பி. கந்தசாமி, எஸ். தம்பிநாயகம் எஸ். மார்க்கண்டு, எஸ். சின்னத்தம்பி.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரி:- செல்விகள் பி. எஸ். கந்தையா, சி. குமாரதாஸன், ஆர். ராஜரத்தினம், எஸ். ராஜரத்தினம், ஆர். இரத்தினம், பி. சிவசுப்பிரமணியம், வி. ஐ. சோமதிலகம், எஸ். சுவாமிநாதன், டி. யோசப்பர்.

யாழ். கான்வென்ட்:- செல்விகள் ஈ. ஆர். அந்தோணி, பி. பஸ்தியாம்பிள்ளை, எம். ஓ பி. எஸ். ஞானப்பிரகாசம், எம். ஏ. எஸ். தாசிசி, ரி. கணபதிநாதன், ஏச். மனுவேல்பிள்ளை, சி. என். நாகராஜன்.

யாழ். மத்திய கல்லூரி:- ஜே. அமலசீலன், என். ஆறுமுகம், பி பாலசுப்பிரமணியம், எஸ். நடராஜா, கே. நவரத்தினம், கி. சிதம்பரநாதன்.

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி:- ஏ, குமாரசாமி, சி. பத்மநாதன். எஸ். தனபாலன்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி:-செல்விகள் பி. அருணுசலம், எஸ். வி. நடராஜா, ஆர். எம். ராஜசேகரம், கி. ராஜசூரியர், ஏ. சதாசிவம், எம். ஜே. சுப்பிரமணியம், எம். ஜே. தம்பிப்பிள்ளை, டபிள்வு. விஸ்வலிங்கம்.

யாழ். சென். பற்றிக்ஸ்:- எஸ். ஏ ஜெரோம்.

வண்ணை- வைத்திஸ்வர வித்தியாலயம்:- எஸ். ஏ. எம், முத்தார், எம் ஜே. எம். யுசூப், ரி. ராஜரத்தினம், ரி. ராஜகுலவீரசிங்கம், எஸ் சண்முகராஜா, என். சண்முகசுந்தரம், டி. துரைராஜா.

மானிப்பாய் இந்துக்கல்லூரி: எம். டி. கணேசலிங்கம்.

மானிப்பாய் மகளிர் கல்லூரி:- செல்வி எம். முத்தார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி:- கே. மகேசு, வி நாகலிங்கம், சி சின்னத்தம்பி, வி. திருஞானசம்பந்தசுவாமி, செல்வி பி, நமசிவாயம், அன்னபரிபூரணம், செல்வி எஸ். தியாகராஜா.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி:- ர. சண்முகலிங்கம்

இளவாலை கான்வென்ட்:- செல்விகள்எம்.ஆர். ஞானப்பிரகாசம் ஜி. எஸ், மாத்தியாஸ்

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி:- செல்வி என். கணபதிப்பிள்ளை, எஸ். அரியகுட்டி கே. எஸ். அருளானந்தர், ஆர். கோவிந்தன், எஸ். கிருஷ்ணராஜா, கே. பரமசாமி, ஏ. சண்முகலிங்கம் என். சண்முகதாசன். கே. சுப்பிரமணியம், ஆர். தவராஜா, கே. திருச்செல்வராஜா, என் தியாகராஜா, ரி. மகேந்திரன்.

அளவெட்டி, அருணேதயா, என். தம்பிமுத்தன், செல்வி. சி. ராஜேஸ்வரி,

கன்னுகம் இராமநாதன் கல்லூரி செல்விகள் என். அன்னலக்சுமி, கே. ஹமீதா உம்மா, எஸ். ஈஸ்வரி, ஜே சபாரத்தினம், கே. இராமலிங்கம், கே. மங்கையர்க்கரசி, கே. நாகபூஷணம், என். கதிரிப்பிள்ளை, எம். பாக்கியலட்சுமி, ஆர். பாக்கியரத்தினம், வி. பிரியதர்சினி, எம். புனிதவதி, எஸ். புஷ்பராணி, எம்.சகுமா உம்மா, கே. ராஜலட்சுமி கே. ராஜலட்மி, ஆர். குமாரசிங்கம், கே. ராசலட்சுமி, வி. ராசமணி, ரி. சந்திரபவனி, எஸ். சரஸ்வதி, கே. சரஸ்வதி, எஸ். என். யு. சமீன், எஸ். நடராஜா, எஸ் சேனுதிராசா, எம். சி.சுபத்திபா. எஸ். பொன்னுத்துரை, கே. தகீர் உம்மா, பி, தவமணிதேவி, வி. சுந்தரம்பிள்ளை, கே. விக்னேஸ்வரி, கே. விஜயலட்சுமி, வை. சம்பந்தர்,

உடுவில் மகளிர் கல்லூரி செல்வி, ஜி. எஸ். செல்லையா.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆர். அழகானந்தம், வி. பாலகுமாரன், ஈ. எஸ், ஜெரி, ரி. ஜெயவீரசிங்கம், கே. பரம்சோதி, எஸ். பத்மயோகன், என். ஏ, சிவசோதி, எம். சிறீபதி, என். தங்கராஜா, கே. ஈ. ஈஸ்வரபாதம்.

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் செல்வி வை சுப்பிரமணியம்,

பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி செல்விகள்: ஐ. எஸ். ஆறுமுகம், எம். ஏ.எஸ். ஞானப்பிரகாசம், பி. கந்தசாமி, எஸ். நடராசா, ஏ. பசுபதி, எஸ். பசுபதி, ரி. பசுபதி, பி. ராஜேந்திரம், ரி. ராமலிங்கம், பி. சபாபதிப்பிள்ளை, எஸ். சம்பந்தநாதர், வி. செகராசசிங்கம், ஆர். செல்லத்துரை, ஜி. சின்னத்தம்பி,வி,செல்வமணி.

தெல்லியடி மத்தியமகா வித்தியாலயம் செல்விகள் ஏ. வசந்தராணி, எஸ் பத்தினிப்பிள்ளை.

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி செல்விகள் எஸ், பாலகிருஷ்ணபிள்ளை, பி. கணேசபிள்ளை, கே.கணபதிப்பிள்ளை.

கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரி கே. பாலசுப்பிரமணியம், ஐ. தங்கத்துரை, செல்வி வி. பத்மாசனி.

வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி ஏ.பாலகிருஷ்ணர்,வட்டுக்கோட்டையாழ்ப்பாணக் கல்லூரி:- செல்விகள் எஸ். ஆலாலசுந்தரம், என்.வடிவழகாம்பாள்,என். இரத்தினசபாபதி.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி:- ஏ. கதிரைமலைநாதன்.

காரைநகர் இந்துக்கல்லூரி:- செல்வி ஜி. விமலநாயகி.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி:- செல்விகள், ஜே. சின்னத்துரை, ஜே. கந்தசாமி.

நவாலி அரசினர் மகாவித்தியாலயம்:- செல்விகள், ஏ. ரெஜீனு, சி. திரேசா

யாழ்ப்பாணம் தனிப்பட்டவர்கள்:- கா. அருளானந்தம், நிக்கலஸ் அருளானந்தம், எஸ். குணவீரசிங்கி, ரி. மார்க்கண்டு, செல்விகள் கே. செல்லையா, கே. கந்தசாமி, ரி. நடராஜா, ஆர். புண்ணியமூர்த்தி, ரி. சண்முகநாதன், எஸ். சிற்றம்பல

(8-ம் பக்கம் பார்க்க)

சுவீப் . . .

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

ரூ. 548-80 சதம் கொண்ட 100 ஆறுதல் பரிசுகள்.

18 X 0599	09 S 0401
19 J 0153	39 B 0394
37 U 0150	15 D 0467
11 M 0811	38 B 0599
39 E 0518	08 K 0499
19 H 0577	22 B 0465
37 J 0870	31 X 0800
28 Q 0980	37 A 0756
31 B 0629	14 H 0232
10 C 0919	32 Q 0205
14 V 0553	23 Y 0027
31 U 0038	25 P 0013
39 H 0029	15 W 0075
35 J 0997	12 G 0219
35 F 0823	27 K 0941
08 R 0496	15 H 0405
10 Y 0284	04 R 0330
09 Y 0100	08 E 0727
41 X 0591	04 G 0182
16 Y 0976	11 G 0248
10 G 0569	15 V 0519
41 X 0215	15 P 0001
36 C 0333	09 L 0104
25 T 0985	14 F 0162
41 U 0609	02 F 0646
26 Y 0070	38 X 0086
01 C 0149	27 F 0839
10 P 0280	34 B 0256
27 Q 0811	19 M 0101
41 V 0646	27 M 0270
14 L 0249	04 T 0235
23 A 0712	08 X 0349
40 P 0286	28 V 0767
17 Z 775	33 D 0882
23 V 0358	29 S 0087
27 G 0248	24 A 0803
03 V 0520	39 P 0371
21 M 0108	33 M 0802
27 G 0481	27 T 0051
32 T 0701	33 B 0008
22 A 0495	32 N 0410
10 G 0795	18 K 0643
16 Q 0531	02 Z 0565
16 L 0548	39 Q 0111
40 D 0906	36 T 0786
09 P 0215	10 H 0240
21 S [illegible]	[illegible] G [illegible]
26 F 0896	40 K 0497
17 J 0821	11 T 0262
02 X 0262	36 A 0967

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியலில் தொழிலாளர்

—இராஜன், கொழும்பு—

பொருளியலில் தொழிலாளர்களுக்குள்ள முக்கிய பங்கைப் பற்றிய கருத்து இன்றைய சூழ்நிலையில் எல்லா நாடுகளிலும் விரிவாக ஆராயப்பட்டுவருகின்றது.

நமது இலங்கை நாடு சிறியது, ஆனால் வளம் பெரியது. இந்த வளத்தைத்தக்க முறையில் பயன்படுத்துவது தொழிலாளர் கடமை. தொழிலாளர் என்பது கூலி வேலைசெய்யும் தொழிலாளி அல்ல. இந்நாட்டில் மனிதனாகப் பிறந்த அனைவரும் ஒரு எசமானனின் கீழ உள்ள தொழிலாளர்களே!

வர்க்க பேதங்கள்

இலங்கையில்எத்தனையோ மனிதர்கள் பணத்தைவைத்துக்கொண்டு, பத்திரிகைகள் மாதிரி எண்ணிக்கொண்டு சகல சுகபோகங்களையும் அனுபவித்துக்கொண்டு வாழ்கின்றார்கள். ஆனால் எண்ணற்ற நடுத்தர வகுப்பினரும் வாழத்தான் செய்கிறார்கள். இதே நாட்டில்தான், வேளைக்குவேளை உண்ண உணவில்லாமல் இருக்க இடமில்லாமல் அன்றாடு பிழைத்துத் தவிக்கிறார்கள் ஒரு பெரும் பகுதி மக்கள்.

ஆனால் இது இயற்கையாய் வந்துவிட்டதால். இப்பிரச்சனையைத் திடீரென்று மாற்றி அமைத்துவிடமுடியாது. இப்பிரச்னைகள் நாளுக்கு நாள் வளர்ந்துவரும் நமது சமுதாயத்தில் கண்ணியமாகத் தீர்க்கப்படவேண்டும்.

நாட்டில் வாழும் மக்கள் தரம் குறிக்கப்பட்ட காலஎல்லைக்குள் ஒரேமாதிரியாக அமைந்தால் எவ்வளவு இன்பமாக வாழமுடியுமென்று ஒருகால் யாவரும் எண்ணிப் பார்ப்போமானால் எங்கள் மனம் எவ்வளவு திருப்தியாகவிருக்கும்.

தீர்வுகாண வழி

இப்படியாக எங்களால் வாழவேண்டுமானால் நாம் என்ன என்ன செய்யவேண்டுமென்று ஒருமுறை பார்த்தால்:-

(அ) வருமானம் போதியதாக இருக்கவேண்டும். (ஆ) வாழ்க்கைச் செலவு வருமானத்திற்குஉட்பட வேண்டும். (இ) அத்தியாவசியமான பொருள்களுக்கு விலையில் கட்டுப்பாடு இருக்கவேண்டியது மிக அவசியம். (ஈ) அளவுக்கு மீறி இலாபமீட்டும் கம்பனிகள், தொழிற்சாலைகள், தோட்டங்கள் ஆகியவற்றில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கு இலாபத்தில் பங்கீடு வழங்கவேண்டியதவசியம்.

இன்று நாம் யாவரும் அறியக்கூடியதாக எத்தனைபேர்கள் எதுவித கஷ்டமும் இல்லாமல் சொகுசாக இருந்துகொண்டு ஒரு குறிக்கப்பட்ட கம்பனியிலோ அல்லது ஒரு தொழில் நிலையத்திலிருந்தோ மாதாமாதம் ரூபா ஆயிரம் அல்லது இரண்டாயிரம் வரையிலும் சம்பளம் என்று பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்-இதே தொழிற்சாலையில் தான் நேரத்தில் ஓருநிமிடம் தவறாமல் வேலைக்கு சமுகம் கொடுத்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் நூறுபெறும் உடலுழைப்புத் தொழிலாளிகளும் வேலைசெய்கிறார்கள்.

இங்கு நூறுரூபாய் சம்பளம் பெறும் தொழிலாளி ஒருநாளில் இரண்டு மணி நேரம் செய்யும் வேலையும் பெருந்தொகைப் பணத்தைப் பெறுபவர்கள் ஒரு மாதத்தில் செய்யும் வேலையும் கிட்டத்தட்டச் சமனாகும் என்றால், தொழிலியலில் எப்போது நாம் மாற்றத்தை ஏற்படுத்தமுடியும்? இப்படியானநிலை ஏன் ஏற்படவேண்டும், இதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்று ஆராய்வதற்கு நம் நாட்டில் உள்ள பொருளியலாளர்களின் பெரும் பணமே அவர்களை மூடிக்கொண்டு இருக்கிறதால், அவர்கள் பணக் குவியல்களுக்குள் புதைந்து இருப்பதால், அவர்கள் தாமாக வரமாட்டார்கள். பொதுமக்கள் உதவி [illegible]டும்.

துன்பத்தைக்கண்டு அழலாமா?

- சி. காசிப்பிள்ளை, எழுதுமட்டுவாள் -

உலகிலே உள்ளவர்கள் எல்லோரிடமும் 'இன்பமும் துன்பமும் சுழலும் சக்கரம்" என்று சான்றோர் கூறியுள்ளனர். சிலர் துன்பம் ஏழைகளிடம்மட்டுந்தான் காணப்படுகிறது. என்று கூறுகிறார்கள். இந்த மன நோயாகிய துன்பம் ஏழைகளிடம் மட்டுமல்ல, எல்லோரிடமும் காணப்படுவது சர்வ சாதாரணந்தான்.

துன்பத்துக்காரணம் ஒவ்வொருவருடைய உள்ளமுந்தான். மனப்பக்குவம் அடையாதவர்கள் தாம் எப்படி வாழவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளாதகாரணத்தால் துன்பத்தை விலைகொடுத்து வாங்குகிறார்கள்.

போதுமென்ற மனமே...

சிலர் துன்பத்தை தாங்களே வருவித்துக்கொள்கிறார்கள். நமது வாழ்க்கையில் நாம் நினைத்தவை எல்லாவற்றையும் பெற்று இன்பமாக இருக்கமுடியாது. இருப்பதை எண்ணி இன்பம் கொள்ளாமல் இல்லாததை எண்ணித் துன்பம் கொள்கிறார்கள் அநேகர். இருப்பதை எண்ணி இன்பம் கொள்ளுவதே வாழ்க்கையின் வெற்றிக்குரிய இரகசியம், போதும் என்ற மனமே பொன்னானது. இதுவே இன்பத்தைக்கொடுக்க வல்லதுமாகும்.

துன்பத்தைத் தாங்கமுடியாது எத்தனையோ பேர் தங்கள் உயிரையே தியாகம் செய்கிறார்கள்; காதலிற் தோல்விகண்டோரும், பரீட்சைகளிற் தோல்வி கண்டோரும் தோல்வியின் துன்பம் தாங்க முடியாமல் உயிரை பலி கொடுப்பது நாம் கண்டறிந்த உண்மையே. இது போன்ற இன்னும் எத்தனை வகையாரோர் பல விதத் துன்பங்களைத் தாங்கமுடியாது உயிரை விடுகிறார்கள்.

இவர்கள் எல்லோரும் துன்பத்தை எதிர்த்திருந்தால் தங்கள் உயிரைவிட வேண்டிய அவசியமில்லை. துன்பத்தை எதிர்ப்பதற்கு துணிவும், தன்னம்பிக்கையும் வேண்டும். துன்பம் நம்மைப் பார்த்துக் குரைக்கும் நாய், அதை நாம் துரத்தி விட்டால் அது ஓடிவிடும். துன்பம் இரவு பகலைப்போன்றது. தற்போது மனிதன் தன் சிந்தனை சக்தியினால் மின்விளக்குகளைக்கண்டுபிடித்து இரவை பகலாக்குகின்றான். அது போல் துன்பமாகிய இரவையும் நம் அறிவினால் துரத்திவிடவேண்டும். இவ்வாறு துரத்திவிட்டால் துன்பத்தைக்கண்டு அழவேண்டியதில்லை. உயிரையும்விட வேண்டிய அவசியம் ஏற்படமாட்டாது.

நா டு ம்

மீனவர்களுக்கு லோஞ்சு கிடைக்க வேண்டும்

— ஆர். அருள்ஞானப்பிரகாசம், இடைக்காடு —

தொண்டமானாறு கடற்கரைக்குப் போனால் ஐந்து ஆறு லாஞ்சுகள் கரையில் இருப்பது இந்த நாளையில் சர்வசாதாரண காட்சியாக இருக்கும். இதே காட்சியை தொண்டமானாற்றிலிருந்து பருத்தித்துறை மட்டும் காண்கின்றோம். கடந்த பதினைந்து ஆண்டுகளாக இதே காட்சியை நம்மால் அங்கே காண முடிகிறது.

மோட்டார் லாஞ்சுகள் தொடக்க காலத்தில் மிகவும் ஏற்பாடாக இங்கு வந்து சேர்ந்தன. நல்ல விலை கொடுத்து தங்கள் உபாயத்திற்கும் உபயோகத்திற்கும் பொருத்தமாக வாங்கினார்கள். தற்சமயம் அவதானித்தால் பழைய எண்ணிக்கைகள் அங்கே இன்னும் இருக்கின்றன. பல புதிய லாஞ்சுகள் வாங்கும் முயற்சியை தணித்துவிட்டார்கள். லாஞ்சுகள் உபயோகிக்கும் தன்மைக்குச் சாதகமாகப் பின்வரும் காரணங்களை விளக்கலாம்.

முதலாவது: தற்சமயம் சுங்க இலாகா தொந்தரவு கொடுப்பதுமிகவும்குறைவு. அவர்கள் தெரிந்த காப்புஸ்தரிப்புச் செய்து தொந்தரவு கொடுப்பதை குறைத்துவிட்டிருக்கிறார்கள். இதன் காரணமாக இந்தியாவுக்குக் களவாக பிரயாணம் செய்பவர்கள் எண்ணிக்கை தற்சமயம் குறைவு. கடத்தல் வியாபாரத்தில் லாபம் குறைந்த பிறகு இந்தக் கரையில்

"மலரோன்"

இருப்பவர்கள் பல தடவை இத்தகைய முயற்சிகளை கைவிட்டுவிட்டார்கள். பெரும்பாலும் மீன்பிடித் தொழிலுக்கே லாஞ்சுகள் தற்சமயம் உபயோகிக்கப்படுகின்றன. இதனால் சுங்க இலாகா அதிருப்தி காட்டாமல் இருக்கிறது.

இரண்டாவது: முன்பு வாங்கப்பட்டவையும் தற்சமயம் உபயோகத்திலிருப்பவையுமான லாஞ்சுகள் பதினையாயிரம் ரூபா தொடக்கம் இருபதினாயிரம் ரூபா மட்டும் பெறுமானமுடையவை. காலத்தில் பதினைந்து ஆண்டுகள் ஆன பிறகு சுங்க இலாகாவிடம் தகுதிபுத்தரவாதம் பெற்றவையாக இன்னும் இருக்கின்றன' உபயோகத்திற்கு இப்பொழுதும் இவை திருப்தி தருபவை. இவை ஐம்பது ஆண்டு கால உத்தரவாதத்துடன் பெற்றவையாகும். இதனால் லாஞ்சுகள் லாபகரமான சேவை செய்துகொண்டிருப்பவையாக அமைந்துள்ளன.

மூன்றாவது: தற்சமயம் வியாபார அந்தஸ்து உயர்வாக இருக்கிறது. மீன் சொல்முதல் செய்யும் வியாபாரிகளும் தனிப்பட்டவர்களும் தொடர்பாக இருக்கிறார்கள் மீன்பிடித்தொழில் இப்பகுதியில் நிச்சயமான லாபகரமான முயற்சியாக வரத் தகுந்தது.

நான்காவது: லாஞ்சுகள் வைத்து மீன் பிடிக்குமளவு வசதியான வாழ்க்கை அமைப்பு இந்தப் பகுதியில் உள்ள மீனவர்களிடம் உண்டு. இவர்கள் காலத்தில் தீர்ந்த ஏழைகள் ஆகிவிடுபவர் அல்லர். கஷ்டப்பட்டு உழைக்கவும், உயர்ந்த அந்தஸ்துக்கு வரவும் தெரிந்தவர்கள்.

இந்நிலையும் நோக்கி [illegible] ருக்கவும் உபயோகிக்கவும் அனுமதி அளிக்கப்படவேண்டும்.

2. லாஞ்சுகள் அரசாங்க உதவியுடன் வாங்கும் வகையில் செய்யப்படவேண்டும்.

இரத்ததானம் செய்யுங்கள்

-செ. அ. விமலசேகரம்-

((சில்லையூர்))

ஒரு துளி இரத்தமின்றிப் பல நூற்றுக்கணக்கான மக்கள் பரிதாபமான மரணமடைகிறார்கள் என்ற செய்தியைப் பல தினசரிகளில் கண்ணுற்றிருப்பீர்கள் என்றெண்ணுகிறேன். நாட்டு மக்களின் உயிரை மீட்க ஒவ்வொருவரும் இரத்ததானம் செய்ய எப்பொழுது முன்வருகிறோமோ அந்நாளே மக்கள் குலம் ஓங்கி வாழும் நன்னாளாகும்.

புத்தரைப் போற்றுகின்றோம்; யேசுவை வழிபடுகின்றோம்; காந்தியை மதிக்கின்றோம். இவர்கள் எல்லோரும் மக்களின் துன்பங்களைத் துடைக்கப் பாடுபட்டார்கள். அக்கொள்கைக்காகவே தங்கள் உயிரையும் நீத்தார்கள். ஆனால் இந்த மகான்களைப் போற்றி வழிபடும் மக்களாகிய நாங்கள் பிறர்படும் துன்பங்களைக் கண்டு பேசாமடந்தைகளாக இருக்கின்றோம். ஒரு துளி இரத்தம் தந்து ஒரு உயிருக்கு வாழ்வளியுங்கள் என்று வைத்தியஇலாகா பலமுறை அறிவிப்புக் கொடுத்தும் கேட்காத செவிடர்கள்போல் காலம் கழிக்கிறோம். இதனால் அவ்வுயிர் மாய்ந்து மடிந்து போவதை நாம் கனவிலும் கருதுவதில்லை. "ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று மார்தட்டிக் கூறிய பாரத மனம்படைத்த பாரதியின் வளம்மிகுந்த பாடல்களை ஆழ்ந்து படித்து வரும் நாங்கள் பிறரின் துன்பங்களை எம் துன்பங்கள்போல் எண்ணி வாழ மறுப்பது எவ்வளவு இழிவான செயலென்பதைச் சுத்த இரத்தம் ஓடும் ஒவ்வொரு மனிதனும் சிந்தித்தல்வேண்டும்.

மனிதன் மின்சக்தியுடன் விளையாடிக்கொண்டிருக்கும் இந்த இருபதாம்

(7-ம் பக்கம் பார்க்க)

நா மு ம்

கடிதம்

இதுதான் நீதியா?

"இவ்வருட முடிவுக்குள் இத்தனையாயிரம் வாலிபர்களுக்கும், இத்தனையாயிரம் யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும்; ஊழல்கள் ஒழிக்கப்படும்; தேசியப்பிரச்சினைகளுக்கு நீதியான தீர்வு காணப்படும்."

இப்படிப்பட்ட வார்த்தைகளை நம் நாட்டின் பிரதமர் முதல், சாதாரண அரசாங்கக்கட்சி எம்.பி. க்கள் வரை சதாகூறிவருகின்றனர்.

ஆனால் இவையாவும் வெறும் சிலுசிலுப்பேயொழியவேறொன்றுமல்ல வென்பதனை நாம் எடுத்துக் கூறுதவிட முடியாது. இதற்கொரு சிறு உதாரணத்தையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

1963-ம்ஆண்டு இ. போ. ச. பஸ், கண்டக்டர்களுக்காய நேர்முகப்பரீட்சை ஒன்றினை நடாத்தியது. அதில் ஒரு குறிப்பிடப்பட்ட தொகையினர் தெரிவு செய்யப்பட்டனர். அதில் நானும் ஒருவன். தேவைக்குக் கூடுதலானோர் இருப்பதனால், அவ்வப்போது தேவையானோரை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்தனர். இதன் பயனாக 1964-ம் ஆண்டு, தொகுதி தோறும் 12 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டனர். மிகுதியானோரைத் தேவை ஏற்படும் பொழுது சேர்த்துக் கொள்ளப்படுமெனவும் வாக்களித்தனர். அதன்படி மிகுதியானோரில் 1965-ம் ஆண்டு தொகுதிக்கு 24பேர் வீதம் தெரிவு செய்தனர். இன்னும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை ஏறத்தாழ முப்பது, நாற்பது பேர்கள் தான் இருக்கின்றோம். அடுத்ததவணை எம்மைச் சேவையில் சேர்ப்பதெனவும் உத்தரவாதமளித்தனர்.

ஐயகோ! இதென்ன கொடுமை! எம்மைநட்டாற்றில் விட்டுவிட்டு, இவ்வருட முற்பகுதியில் இ. போ. ச. மீண்டும் விண்ணப்பங்கள் கோரியிருந்தது. நாம் வேதனை அடைந்ததுடன்இக்கவுலான்களது கவனத்திற்கும் கொண்டுவந்தோம், பயனில்லை. புதிய விண்ணப்பத்திலாவது பலன் கிடைக்குமென எண்ணி விண்ணப்பித்தோம். ஆனால் எமது மனுக்களெல்லாம் எங்கோ வீசப்பட்டுவிட்டன. எம். பி. க்களது சிபார்சைப் பெற்றோர் பின்கதவு மூலம் பதவிக்கு வருகின்றனர்.

இதனைச் சென்றவாரம் "ஈழநாடு" பத்திரிகையில் வரும் "நாட்டிலும் நகரிலும்" பகுதி இலேசாக எடுத்துக்காட்டியது. அத்துடன், 3-3-66ல் வெளிவந்த ஈழநாட்டில் "எமது நிலை என்ன?" என்ற தலைப்பில் ஒரு அகதியர் கடிதமும் எழுதியிருந்தேன். ஆனால்

(7-ம் பக்கம் பார்க்க)

"நாடும் நாமும்" பகுதியை வரவேற்றும் பல வாசகர்கள் எமக்குக் கடிதங்கள் எழுதி வருகிறார்கள். அவர்களுக்கு எமது நன்றி.

பொருளாதாரம், விஞ்ஞானம், கல்வி, மதம் சம்பந்தப்பட்ட விரிவான கட்டுரைகளை 'நாடும் நாமும்' பகுதிக்கு எழுதி அனுப்புமாறு வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

கிராம முன்னேற்றச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், இளைஞர் மன்றங்கள் தத்தமது நடவடிக்கைகள் பற்றி எமக்கு எழுதி அனுப்பலாம். ஆனால் அவை உத்தியோக பூர்வமான ஆதாரத்துடன் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சிலர் கட்டுரைகளை தாளின் இருபக்கங்களிலும் எழுதுகிறார்கள். இத்தகைய கட்டுரைகள் கண்டிப்பாகப் பிரசுரிக்கப்படா. தயவுசெய்து தெளிவானமையில் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி அனுப்புங்கள்.

'வளவளா'வென்று கட்டுரைகளை நீட்டாமல் தர்க்க ரீதியாக, எடுத்த பொருளை இடித்துரைக்கும் வகையில் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இரத்ததானம்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நூற்றண்டிலே வல்லரசுகள் விஞ்ஞானத்தால் தங்கள் வீரத்தைக் காட்டும் பொருட்டு அணுகுண்டு வீசிச் செய்த உலகை அழிக்க முடிவுசெய்துகொண்டிருக்கின்றன. இந்நேரத்தில் கொடிய விஷ வாயுக்களாலே மனிதன் நோய் வாய்ப்பட்டுக் கொண்டிருக்கிறான். அத்துடன் கணத்துக்கணம் உண்டாக்கப்படுகின்ற ஆச்சரியமூட்டும் போக்குவரத்துச் சாதனங்களாலும் மனிதன் நிமிடத்துக்கு நிமிடம் விபத்துகளில் சிக்கிக் கொண்டிருக்கிறான். போட்டிகளும், பொறாமைகளும் மிகுந்த உலகிலே மனிதன் ஆயுதங்களாலும், நோய்க் கிருமிகளாலும் தாக்குண்டு உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே பல மக்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கு இரத்தம் தேவைப்படுகிறது. நாடெங்கும் நோய்களைத் தடுக்க நாட்டிலுள்ளஒவ்வொருபிரசையிடமிருந்து பலவந்தமாக இரத்தம் எடுக்க அரசாங்கம் முயற்சிசெய்து கொண்டிருக்கிறது.

வாரி வாரி வந்தவர்க்கெல்லாம் முகத்தில் புன்னகை தவழப் பொருள் வழங்கிய வள்ளல்களுடைய தமிழ்மரபிலே இன்று ஒரு உயிரைக் காப்பாற்ற ஒரு துளி இரத்தம் பலவந்தமாக அரசாங்கத்தால் தமிழ் மக்களிடையே இருந்து எடுக்கப்படப்போகிறதென்பதை அறிந்தும் மானத்துக்காகவே வாழ்ந்து மடிந்த எம் முன்னோரின் வழிவந்த நாம் இன்னும் இரத்த தானம்செய்யப் புறப்படாமல் இருப்பது தகுமா?

"ஒரு துளி இரத்தம் தாருங்கள்" என்று கூறி, எத்தனையோ தாய் தந்தையர், சகோதர சகோதரிகள் கண்ணுக்கணுவாக உயிர்விடுகிறார்கள். இதைக் கண்ணுறும் மக்களே! உடனே இரத்த தானம் செய்யப் புறப்படுங்கள். நீங்கள் பின்வாங்கும் ஒவ்வொரு நிமிடத்திலும் பல உயிர்கள் காலனின் கையில் சிக்கிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே காலம் தாழ்த்தாது உங்கள் இரத்தத்தைக் கொடுத்து ஓராயிரம் உயிர்களைக் காப்பாற்றுங்கள். இதுவே நீங்கள் நாட்டுக்குச் செய்யும் சிறந்த சமூக சேவையாகும்.

இதுதான் நீதியா ..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இவையாவும் செவிடன் காதில் சங்கு' போலாகியது. மாறாக எம். பி. க்களது உறவினர்களும், அவர்களது ஆதரவாளர்களுந்தான் பயனடைகின்றனர்.

தொழில் இணைப்பு சத்தோரில் முன்று, நான்கு வருடங்களாகப்பதிவுசெய்தும் வேலைவசதி இல்லை; ஆனால் இதற்கு மாறாக தொழும்பில் ஒரு பெண் காலியில் ஒரு தொழிலுக்குப்பதிவுசெய்ய, காலியில் அவ்வேலை கிடைத்ததாக ஒரு தினசரிப் பத்திரிகை கூறியது.

தேர்தலில் முன் கட்சி மனப்பான்மை இருக்கலாம். ஆனால் தேர்தலின் பின் இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவானது அரசாங்கம். அதேபோல அந்தந்தத்தொகுதி மக்கள் அனைவருக்கும் சேவை செய்ய வேண்டியவர்கள் எம். பி. க்கள்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு, ஒவ்வொருக்குக்கிடைக்கவேண்டிய வேலையை நீதியற்ற முறையில் இன்னொருவருக்கு கொடுப்பதன் மூலமா தேர்தல் வெற்றிக்கு வழிவகுப்பது? இதுதான் நீதியா? இதுதான் ஜனநாயகமா? இதுதான் அரசாங்கத்தின் கொள்கையா?

பொ. அழகரத்தினம்,
கோண்டாவில் மேற்கு.

திருவாசகவிழா

அனுராதபுரம், சனி

அனுராதபுரம் விவேகானந்தசபை, திருவாசக விழாவை இம்மாதம் 11-ம் திகதி விவேகானந்த தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் கொண்டாடவிருக்கிறது.

பூநகரியில பயிர்ச்சேதம்

கோண்டாவில், சனி

பூநகரியில் கடந்த மூன்று நாட்களாகத் தொடர்ந்து பெய்த மழையினால் நெல் வயல்கள் சேதமடைந்தன. வரம்புகளை மீறி வெள்ளம் பாய்கின்றது. கிளைத்த நெல்கள் நீரில் முழ்கிவிட்டன. வயல்களிலேயுள்ள நீர் வற்றுவதற்கு அதிக நாட்கள் எடுக்குமெனக் கருதப்படுவதால் நெல்விதைப் பதற்கான பருவ காலத்தை விவசாயிகள் இழக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பதவி உயர்ச்சி

ஊர்காவற்றுறை சனி

காரைநகர் தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு சு. மகேஸ்வரன் 1-ம் பிரிவு தபால் அதிகாரியாகப் பதவி உயர்ச்சியடைந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மீனவரின் பயங்கர அனுபவங்கள்

கல்கத்தாவிலுள்ளவர்களின் சோகக் கதை

முல்லைத்தீவு, சனி

அண்மையில் முல்லைத்தீவிலிருந்து காணாமற் போன மீனவர்களில் மூவர் இப்போது கல்கத்தாவில் இருக்கிறார்கள் என்று செய்தி கிடைத்திருக்கின்றது. இம் மூவரையும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

'நடுக்கடலில் திசையேதுவும் தெரியாது திண்டாடித் தத்தளித்தபோது, 'டெல்கி' என்ற கப்பல் எங்களைக் காப்பாற்றி கரைசேர்த்தது. அக் கப்பலில் இருந்த ராசு என்பவர் வேண்டிய உதவிகளைச் செய்தார்'

முல்லைத்தீவிலிருந்து காணாமல் போன மீனவர்களில் ஒருவர் கல்கத்தா விடுதி வீட்டிலிருந்து கடந்த 3-ம் திகதி தந்தைக்கு அனுப்பிய கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவிலிருந்து காணாமற்போன மீனவர்களில் ஒருவர் இறந்துவிட்டதாகவும், மூவர் கல்கத்தாவில் இருப்பதாகவும், செய்திகள் வெளிவந்தது வாசகர்கள் அறிந்ததே. அந்த மூவரில் ஒருவரான அ. அன்ரனி அல்பிரட் என்பவர், தனது தந்தையான எம். ஆரோக்கியத்திற்கு விரிவான கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: நாங்கள் திசை தெரியாது திகைத்தோம்; திண்டாடினோம். இறைவனை வேண்டினோம். என்ன செய்வதென்றறியாது நான்குதிசைகளையும் நோக்கினோம். 'டெல்கி' என்ற கப்பல் எங்களை நோக்கி வந்தது. தூரத்தில் சிறு கடுகுபோலக் கப்பலைக் கண்டதும், மனதில் ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. கப்பல் தம்மைநோக்க வந்தது.

அக்கப்பலில் இருந்த ராசு என்பவர் எல்லா உதவிகளையும் செய்தார். எங்களை 'கப்டனிடம்' பாரம்கொடுத்தார். கப்டன் எங்களை அன்புடன் உபசரித்தார். ஆறுதல் வார்த்தைகள் கூறினார். வேண்டிய உதவிகளைச்செய்தார். எங்களைக் கப்பலிற்

(8-ம் பக்கம் பார்க்க)

கூட்டிச் சென்று கல்கத்தாவையடைந்தார்.

கல்கத்தா அரசாங்க அதிபரிடம் எங்கள் மூவரையும் ஒப்படைத்தார். இப்பொழுது மனநிம்மதியாக இருக்கின்றோம். அத்துடன் மூவரும் சுகமாக கல்கத்தா விடுதியில் இருக்கின்றோம்.

எங்களை இலங்கைக்கு விரைவில் அனுப்புவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் உங்களிடம் வருவோம்.

'மகனின் கடிதத்தை பார்த்தது மகனை நேரில் பார்த்ததுபோலஇருக்கிறது' என்று ஆரோக்கியம் தமது நிருபரிடம் தெரிவித்தார். மூவரின் உயிரைக் காப்பாற்றியதற்காக மகன் குறிப்பிட்டிருக்கும் ராசு என்பவருக்கு நன்றி செலுத்துகிறோம் என்றும் தந்தை கூறினார்.

நேற்றுக் காலை முதல் ஆரோக்கியம் வீட்டிற்கு பலமீனவர்கள் வந்துஅந்தக் கடிதத்தை படித்து ஆறுதல் கூறிச்சென்றனர்.

கரைசேர்ந்தவர்கள் வெளியிட்ட தகவல்

பலாலி, சனி

''உண்ண உணவில்லை குடிக்க நீரில்லை கடைசியில் வேறு வழியின்றி கடல் நீரை அருந்தினோம். இரண்டு தினங்களாக திசைதெரியாது திண்டாடி கரைவந்து சேர்ந்தோம்''

மயிலிட்டியிலிருந்து திசை மாறிச்சென்று இருதினங்களுக்குப்பின்வந்து சேர்ந்த மீனவர்கள் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினர்.

தாங்கள் சென்ற இரு இயந்திரப்படகுகளும், யந்திரக் கோளாறினால் பழுதடைந்து நடுக்கடலில் திசை தெரியாது இரு தினங்கள் தத்தளித்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இவர்களைத் தேடிச் சென்ற மற்ற இயந்திரப் படகுகள், பழுதடைந்த யந்திரப்படகுகளை, ஊர்காவற்றுறை கரைக்குஇழுத்து வந்தது.

ஓர் இயந்திரப்படகு திசையை ஒருவாறு அறிந்து பருத்தித்துறைக்கரையை வந்தடைந்தது. பழுதடைந்தயந்திரப்படகிலிருந்து மீன்பிடி வலைகள் காணாமல் போய்விட்டதாகவும், இவ்வலைகளை மற்றொரு இயந்திரப்படகு தேடி வருவதாகவும் அறியப்படுகிறது.

தமிழரசு பொதுச்சபை கூட்டம் 19-ந் திகதி நடைபெறும்

கொழும்பு, சனி

தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் இம்மாதம் 19-ம் திகதி திருகோணமலையில் நடைபெறுமெனத் தெரிய வருகிறது

இக்கூட்டத்தை இம்மாதம் 13-ம் தேதி யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக் கட்சி நிலைமைக்காரியாலயத்தில் நடத்த ஏற்கனவே தீர்மானிக்கப் பட்டிருந்தது.

ஏழாலை கொலை முயற்சி வழக்கில் எதிரிகள் விடுதலை

மாவிட்டபுரம், சனி

ஏழாலை கொலை முயற்சி வழக்கில் 4 எதிரிகளும் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

ஏழாலையைச் சேர்ந்த கந்தையா வீரசிங்கம், குட்டித்தம்பி கனகலிங்கம், சுன்னாகத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி தியாகராஜா, ஏழாலையைச் சேர்ந்த குட்டித்தம்பி கனகசுந்தரம் ஆகிய நால்வரும் கடந்த வருடம் மார்ச் மாதம் 4-ந் திகதி சட்டவிரோதமாக கூட்டம் கூடியதாகவும் சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள்கள் பியரத்ன, பெரினண்டோ ஆகியோர்மீது குண்டு வீசி கொலை செய்ய முயற்சித்தது ஆகியன உட்பட 7 குற்றச்சாட்டுக்கள் மீதான வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எல். நிற்சிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சுன்னாகம் பொலிசாரால் தொடரப்பட்ட இந்த வழக்கில் முதலாம் எதிரிக்காக வழக்கறிஞர் ஆர். கண்ணுத்துரை, ஸ்ரீதரனின் உதவியுடனும் இரண்டாம், நான்காம் எதிரிகளுக்கா வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினமும் ஆஜரானார்கள். சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பேர்ஸி விஜயசூரியா வழக்கை நடத்தினார். சப் இன்ஸ்பெக்டர் ராஜநாயகம், எதிரிப்பிள்ளை சிவசம்பு ஆகியோர் சாட்சியமளித்தபின் நீதிபதி சாட்சியங்கள் முரண்பாடாக இருப்பதாகக் கூறி எதிரிகளை விடுதலை செய்தார்.

பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சை

இராமநாதன் மகளிர் கல்லூரியின் சாதனை

கொழும்பு, சனி

பல்கலைக்கழகத்தின் கலை, சட்டப்பிரிவுகளுக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளவர்களில் பெரும் பான்மையானவர்கள் ராமநாதன் மகளிர் கல்லூரியிலிருந்து தெரிவாகியுள்ளனர். இதன்படி ராமநாதன் மகளிர் கல்லூரி ஏனைய கல்லூரிகளுடன் ஒப்பிடுகையில் முதலிடம் வகிக்கிறது.

இலங்கை பல்கலைக் கழகப் பகுதி கலை, சட்டப் பிரிவுகளுக்கு மொத்தமாக 2144 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பல்கலைக் கழகப் பகுதிக்கு 1547 மாணவர்களும் வித்தியோதய கழகத்திற்கு 347 மாணவர்களும், வித்தியலங்கார கழகத்திற்கு 250 மாணவர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவற்றுள் 18 பௌத்த பிக்குகள் வித்தியோதய பகுதிக்கும் 11 பௌத்த பிக்குகள் வித்தியலங்காரப் பகுதிக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையிலுள்ள ஏனைய கல்லூரிகளையும் விட இராமநாதன் கல்லூரியிலிருந்து 33 மாணவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இக்கல்லூரியே இலங்கையில் முதலிடம் பெற்றுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

பகிஷ்கரிப்பு...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஷேர்லிகொரியா மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்குகடைசியாக இவர்கள் கோரியிருந்ததும் இக்கோரிக்கை அனுமதிக்கப்படாததும் வாசகர்கள் தெரிந்ததே.

வடபகுதி பல்கலைக்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாதன், ஆர். சிவசந்திரன் எஸ். ஸ்ரீ சண்முகநாதன், எஸ். தருமலிங்கம், எஸ். திருவிளங்கம், செல்விகள் ஏ. எம். பி. ஞானப்பிரகாசம், கே. செல்லையா, கே. கந்தசாமி, எஸ். பொன்னுத்துரை, வி. செகராஜசிங்கம், எஸ். சசிவாதேவி, வி. கந்தையா.

'அபுசாலியின் கோரிக்கை அர்த்தமற்றது'

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலுள்ள இரு முஸ்லிம் பாடசாலைகளில் 62-ம் ஆண்டுமுதலே முஸ்லிம் மாணவர்கள் சிங்களத்தை ஒரு பாடமாக கற்று வருகின்றனர். இந்நிலையில் யாழ்ப்பாணம்முஸ்லிம் மக்கள் சார்பில் முன்னாள் மாநகரசபை உறுப்பினரான ஜினாப் அபுசாலி, யாழ்ப்பாணத்திற்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பும்படி பிரதமரைக் கேட்டிருப்பதில் அர்த்தமெதுவுமில்லை.'

யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் மாணவர்கள் சிங்களத்தை ஒரு பாடமாக கற்பது சம்பந்தமாக முஸ்லிம் பிரமுகர் ஒருவர் மேற்கண்டவாறு நமது நிருபரிடம் கூறினார்.

ஈழநாடு குருவளி

மாத உதவித் திட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கரவெட்டியைச் சேர்ந்த ஓர் அன்பர் 'ஈழநாடு' குருவளிமாத உதவித் திட்டத்தின் கீழ் இம் மாதத்திற்குரிய 25 ரூபாவை அனுப்பியுள்ளார்.

2000 ரூபாவை காணவில்லையாம்

மாவிட்டபுரம், சனி

பலாலியைச் சேர்ந்த சவேரி அந்தோனிப்பிள்ளை காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாடொன்றில்தமது வீட்டில் வைத்திருந்த 2000 ரூபாவைக் காணவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இப்பணத்தை தாம் பெட்டிக்குள் வைத்திருந்ததாகவும் தம்பிவந்து கேட்டபொழுது பெட்டிக்குள் பார்த்தபொழுது பணம் அங்கில்லை என்றும் தமது புகாரில் இவர்கூறியுள்ளார். இது சம்பந்தமாக குற்றப் பிரிவு தடுப்பு பகுதியைச் சேர்ந்த திரு. இராமநாதன் விசாரணைகள் நடத்துகிறார்.

அப்பீல் வழக்கு நிதிக்கு நாடகம்

யாழ்ப்பாணம், சனி

முன்னாள் மேயர் துரையப்பாவின் அப்பீல் வழக்கு நிதிக்காக, யாழ்ப்பாணத்தில் வட்டாரங்கள் தோறும் நாடகங்கள் நடத்த யாழ். வரியிறுப்பாளர் சங்கத்தினர் தீர்மானித்துள்ளதாக அறியப்படுகிறது.

முன்னாள் மாநகரசபை அங்கத்தவர்களும், வழக்கு நிதி சேர்ப்பதில் ஈடுபட்டுள்ளார்களென்றும், தெரிய வருகிறது.

சென்பட்ரிக்ஸ் அமோக வெற்றி

இரு பிரிவுகளிலும் மத்திய கல்லூரி 'கோல்' போடவில்லை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். மத்திய கல்லூரிக்கும், சென். பட்ரிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 1-ம் 2-ம் பிரிவுகளுக்கிடையேயான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகள் நேற்று மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றன. இவ் இருபோட்டிகளிலும் சென். பட்ரிக்ஸ் வெற்றியீட்டியது. இப் போட்டிகளை ஐயாயிரத்துக்கும் அதிகமான ரசிகர்கள் பார்த்து ரசித்தனர்.

முதலில் நடைபெற்ற 2-ம் பிரிவுப் போட்டியில் இடைவேளைக்கு முன்னர் சென். பட்ரிக்ஸ் கல்லூரியே தனது முதலாவது கோலைப் போட்டது இக் கோலை பிரான்சிஸ் போட்டார். இடைவேளையின் பின்னர் சென். பட்ரிக்ஸ் முன்னணி வீரர்களான ராஜேந்திரன், கொன்சலெஸ் ஆகியோர் ஆளுக்கொரு கோல்கள் போட்டனர். கொன்சலெஸ் என்னும் முன்னணி வீரரின் விளையாட்டு ரசிக்கக் கூடியதாக இருந்தது. முடிவில் 3—0 கோல்களால் சென். பட்ரிக்ஸ் வெற்றியீட்டியது.

முதல் பிரிவு போட்டி

இதையடுத்து நடைபெற்ற 1-ம் பிரிவுப் போட்டி அதிர் வெடிகளுக்கிடையே மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பமானது.

இரு கோஷ்டிகளும் பலமாக மோதின. இருசாராருமே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் போட்டியிட்டனர். எனினும் இடைவேளைக்கு இருநிமிடங்கள் முன்னதாக சென்.பட்ரிக்ஸ் வலது உள் முன்னணி வீரர் ஜேக்கப் முதலாவது கோலை வெற்றிகரமாகப் போட்டார்.

இடைவேளைக்குப் பின்னர் போட்டி உச்சக்கட்டத்தை அடைந்தது. சென். பட்ரிக்ஸ் முன்னணி வீரர்கள் பல தடவைகள் கோல்கள் போட எடுத்த முயற்சிகளெல்லாம் எதிர் கோஷ்டியின் பின்னணி வீரர்களான தேவதாஸ், சண்முகலிங்கம், புரட்சிதாசன் ஆகியோரால் முறியடிக்கப்பட்டன. எனினும் சென். பட்ரிக்ஸ் மத்திய முன்னணி வீரர் சந்தியாக்கோ மின்னல் வேகத்தில் இரண்டாவது கோலைப் போட்டார். இச் சந்தர்ப்பத்தில் மத்திய கல்லூரிக்கு ஒரு 'பனால்டி' கிடைத்தும் அதை அவர்கள் தவறவிட்டனர். இதையடுத்து சென். பட்ரிக்ஸ் வலது முன்னணி வீரர் வெற்றிவேல் மூன்றாவது கோலைப் போட்டார். இப்போட்டி முடிவிலும் சென். பட்ரிக்ஸ் மத்திய கல்லூரியை 3—0 கோல்களால் தோற்கடித்தது. இவ்விரு போட்டிகளுக்கும் முறையே திரு. சற். சிங்கராயர் திரு. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

கடந்த வருடம் நடைபெற்ற போட்டியிலும் சென். பட்ரிக்ஸே வெற்றியீட்டியது.

லண்டன் பயணமானார்

சுழிபுரம், சனி

மாதகலைச் சேர்ந்த கே. ஜெயபாலன் லண்டன் பயணமானார். இவர் உதவி சுப்பிரிண்டனுவார். யூ. என். பி ரி. ஏ. பகுதியினரால்வழங்கப்பட்டுள்ள உபகாரச்சம்பளத்தில் ஒன்பது மாதப்பயிற்சியை முடித்துக்கொண்டு இலங்கை திரும்புவார். இவர் மாதகல் கே. திரு. கந்தையாவின் புதல்வராவார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org